உ

# அருள் ஒளி




## தைப்பொங்கல் சிறப்பு மலர்

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

2013



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 88வது பிறந்தநாள் விழா
ஆரம்ப வைபவத்தின்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள்



# அருள்ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

நந்தன வருட தைப்பொங்கல் சிறப்பு மலர்

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y


## சைவமக்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம்

ஈழத்திருநாடு முழுவதும் சைவ மக்கள் நிறைந்து வாழ்ந்தனர். இதிகாச காலத்தில் இலங்காபுரி திருநீற்றுப் பொலிவோடு வேந்தன் முதல் அனைவரும் விளங்கினர் என வரலாறு கூறுகிறது. திருமூலர் சுவாமிகள் எம் மண்ணை சிவபூமி என விழித்துப் போற்றினார்.

மேரு நடு நாடி மிக்கிடை குறியுறுஞ்
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலையத்தூ
டேறுஞ் சுழுனை இவை சிவபூமியே (திருமந்திரம் – 2747)

இத் திருநாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களும், யுத்தங்களும் காலத்துக்குக் காலம் சைவசமயத்துக்குப் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியமை அனைவரும் அறிந்ததே. நல்லைநகர் நாவலர் பெருமான் கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்படுத்திய சைவ மறுமலர்ச்சியே இன்று இம்மண்ணில் சைவ சமயம் நிலைபெற வழிவகுத்தது. கடந்த நூற்றாண்டுக்கும் இன்றைய காலப்பகுதிக்கும் இடையில் இலங்கையில் சைவமக்களின் வளர்ச்சி வீதம் மிகவும் பின்தங்கிச் செல்வது பாரிய ஆபத்தான செய்தி ஆகும். சமீபத்தில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பு அறிக்கை சைவ மக்களை அதிரவைத்துள்ளது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் கடந்த நூற்றாணடில் கைச்சாதிடப்பட்டது. இதன் விளைவாகச் சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவளி மக்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுப்பப்பட்ட மக்கள் அனைவரும் சைவத்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

தமிழர்களே. அவர்கள் எம் மண்ணில் இன்று இருந்திருப்பாராயின் சைவமக்களின் எண்ணிக்கை பன்மடங்காக வளர்ந்திருக்கும். மேலும் எம் மண்ணில் முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற போர்ச்சூழலில் சைவத்தமிழர்கள் பலரை இழந்துவிட்டோம். பல சைவத்தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வேறு நாடுகளில் குடியேறி வாழ்கிறார்கள். எம்மண்ணில் வாழும் மக்களிடையேயும் பிறப்பு வீதம் குறைந்து செல்வது உண்மை. குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டங்களும், கணவன் மனைவி தொழில் பார்க்கும் காரணங்களாலும் பிள்ளைகளின் எண்ணிக்கை மந்தகதியாக உள்ளது. இவற்றுக்கு மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சில உதவிகளை வழங்கி கெட்டித்தனமாக மதம் மாற்றும் பிற சமயத்தவர்களின் செயலாலும் சைவ சமயத்தவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதை அனைவரும் அறிவர். இந்நிலையில் சமீப காலமாக சைவ சமயத்தின் எதிர்காலம் தொடர்பாக சில அச்சுறுத்தல்கள் தொடர்ந்துகொண்டு இருப்பது வேதனை தருகிறது. கன்னியா வெந்நீர் ஊற்று சைவமக்களின் பெரும் சொத்து.

தற்போது பௌத்தமத நிலையங்களோடு இணைக்கப்படுவதாக திருகோணமலை வாழ் சைவச் சமூகம் தமது வேதனைகளை வெளிப்படுத்தி வருவதை உணரலாம். வன்னிப் பெருநிலப்பரப்பிலும் பல புதிய பௌத்த கோயில்கள் அவசரமாக கட்டப்பட்டு வருகிறது. கிழக்கிலங்கையில் தந்திரி மலைப்பகுதியை பௌத்தர்களுக்குரியதாக மாற்றும் முயற்சி நடைபெறுவதாக அப்பகுதிசார் சைவசமய நிறுவனங்கள் வேதனை தெரிவித்துள்ளமை அனைவரும் அறிந்ததே. பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரச் சூழலுக்கும் பல இடையூறுகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. முன்னேஸ்வரப் பெருமானுக்கு எழுந்த கோபுரத் திருப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளமை வேதனை தரும் செய்தியாகும். சைவ மக்களே விழிப்பாக இருங்கள். சைவ மன்றங்கள் பிறசமயத் தாக்கங்களில் இருந்து சைவத்தை காக்க நல்ல திட்டங்களை உருவாக்கிச் செயற்படுங்கள். சைவ மக்கள் தங்களுக்குள்ளே தாங்கள் மோதி அநாவசியமாக வீணடிக்காது சீரிய வழியில் எதிர்காலம் பற்றி சிந்திக்கவேண்டிய அத்தியாவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

**- ஆசிரியர்**

உ
சிவமயம்

# சைவத் திருநாள் தமிழர் நன்நாள்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள். ஆம் அந்த தை மாதத்தின் வரவைக் கொண்டாடும் நன்நாள் தைப் பொங்கல் என்றால் அது மிகையாகாது.

இந் நன்நாளிலே அதிகாலையிலே நீராடிப் பொங்கலிட்டு இவ்வுலகினை இருட்சூட்சுமம் கௌவாமல் பேரொளியுடன் சுபீட்சமாகத் திகழக் காரணகர்த்தாவாக இருக்கும் சூரிய பகவானை வழிபட்டு அவர்க்கு நன்றிக்கடனை செலுத்திய பின்னரே புத்தாடை அணிந்து கோவிலுக்குச் சென்று வழிபட்டு வீடு சென்று பொங்கல் பகிர்ந்துண்டு கொண்டாடும் வரலாற்றின் பண்டிகை இதுவாகும்.

எம்மில் சிலர் ஏன் இதைக் கொண்டாடுகின்றோம் என்று தெரியாமலேயே இதைக் கொண்டாடுகின்றோம் என்பது தான் கவலையளிக்கின்றது. எம்மவர் விழாக்களிலும் விரத, பண்டிகைகளிலும் ஏதாவது ஓர்அர்த்தமும் புனிதமும் அடங்கியிருப்பது நாமறிந்ததே. எமது பண்டிகைகளில் பெரும்பாலானவை ஏதோ ஒரு விதத்தில் விஞ்ஞானத்துடன் பொருந்தியிருக்கின்றது. இதனை "சமயமும் விஞ்ஞானமும்" என்ற நோக்குடன் பல விஞ்ஞானிகள் இன்றுவரை ஆராய்கிறார்கள்.

எமது பஞ்சாங்க விதிப்படி சூரிய பகவான் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியில் சஞ்சரிக்கின்றான். அந்த வகையிலே "சூரிய பகவான் தனு ராசியிலிருந்து மகர ராசிக்கு மாறும் தினமே தைத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

இதன்போது வீட்டு முற்றத்திலே கோலமிட்டு, நிறைகுடம் வைத்து பிள்ளையார் பிடித்து, கரும்பு, தோரணம், மாவிலை கட்டி, பூத்தூவி, தீபம் காட்டி எழுந்துவரும் சூரிய பகவானை வீழ்ந்து வணங்கி தேவாரம் பாடி விழாவாகக் கொண்டாடுவர்.

மனித உயிர் வாழ்விற்கு சூரிய ஒளி அவசியம் என்பதால் சூரியபகவானை உழவர்கள் சிறப்பிக்க இதனைக் கொண்டாடுவர். இது முதல் அறுவடை காலம் என்பதால் வயலில் விளைந்த புது அரிசியைப் பொங்கல் செய்து சூரிய பகவானுக்குப் படைப்பர்.

பொங்கல் தினத்தன்று தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடாது. "புதியது புகுதல், பழையன கழிதல்" என்பதற்கேற்ப வீட்டிலிருந்து தேவையற்ற பொருட்களை அகற்றி, வீட்டையும் மனத்தையும் தூய்மையாக்கும் நாள் அது.

பொங்கலுக்கு மறுநாள் "மாட்டுப் பொங்கல்" இதனைப் பட்டிப் பொங்கல் எனச் சிறப்பிப்பர். இங்கு கோமாதாவை குலதெய்வமாக எண்ணி அதன்



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

சேவையை விதந்து "கோபூஜை" செய்து வணங்குவர்.

பண்டைய காலத்திலே பெண் பிள்ளைகள் பெற்ற பெற்றோர் தம் வீட்டிலே காளைக் கன்று ஒன்றையும் வளர்ப்பர். பெண் வளர்ந்து பருவக் கன்னியானதும், அக் காளையும் வளர்ந்து விடும். அதனை அடக்கும் வீரனுக்கே அவளை மணமுடித்து வைப்பர். இதன் விஷேசம் என்னவெனில் இது பொங்கல் தினத்தன்று நடைபெறுவதுதான். இதனை "மஞ்சு விரட்டல்" என அழைப்பர்.

இவ்வாறாக பல தத்துவப் பெட்டக விளக்கங்களை அடக்கிய திருநாள்கள் எம்மக்கள் வாழ்விற்கு மிகவும் அவசிய மானவை. ஏனென்றால் எமது வாழ்வு தற்போது "இயந்திரமயமாக மாறிவிட்டது. இத்தகைய பண்டிகை விழாக்களின் போது தான் பெற்றோரை வணங்கி ஆசிபெறவும், உறவினருடன் அளவளாவி மகிழவும் நேரம் கிடைக்கின்றது.

எது எவ்வாறாயினும் இப்பண்டிகை இன்றுவரை கொண்டாடப்படுகின்றதே என எண்ணும்போது சந்தோசம் தான். அவரவர் சக்திக்கேற்ப இத் தைப் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழுங்கள். "புதியன புகும்" இத் தைத்திருநாள் பழைய துர்ப்பாக்கிய நிகழ்வுகள் அனைத்தும் அழிந்து சுபீட்சம் பெறவும் மக்கள் அனைவரும் இந்நாளினை மகிழ்வுடன் கொண்டாடவும் எல்லாம் வல்ல பரம் பொருளை மனதில் நிறுத்துவோமாக.

## ஒன்பது பேறுகள்

திருவருட்பிரகாச வள்ளலார் இறைவனிடம் ஒன்பது பேறுகளை வேண்டுகிறார். ஈயென்று (கொடு என்று) நான் ஒருவரிடம் நின்று கேளாத இயல்பு; என்னிடம் ஒருவர் கொடு என்ற போது அதற்கு இல்லை என்று சொல்லாமல் இடுகின்ற திறம்; இறையாய் நீ என்றும் எனை விடா நிலை; என்றும் உன் நினைவை விடாத நெறி; அயலார் நிதியை என்றும் விரும்பாத மனம்; மெய்நிலை என்றும் நெகிழாத திடம்; உலகில் 'சீ' என்றும், 'பேய்' என்றும் 'நாய்' என்றும் பிறர்தமை தீங்கு செய்யாத தெளிவு; திறம் ஒன்று வாய்மை (வாய்மையே மேன்மை என்ற வண்ணம்); தூய்மை.... ஆகிய ஒன்பது பேறுகளையும் தந்து, 'உமது திருவடிக்கு ஆளாக்குவாய்' என்று அவர் இறைவனை வேண்டும் அந்தப் பாடல்.....

**ஈஎன்று நான் ஒருவரிடம் நின்று கேளாத**
**இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது**
**இடு என்ற போது அவர்க்கு இலையென்று சொல்லாமல்**
**இடு கின்ற திறமும் இறையாம்**
**நீ என்றும் எனவிடா நிலையும் நான் என்றும் உன்**
**நினைவிடா நெறியும் அயலார்**
**நிதியொன்றும் நயவாத மனமும் மெய்ந் நிலையென்றும்**
**நெகிழாத திடமும் உலகில்**
**சீ என்று பேய் என்று நாய் என்று பிறர்தமைத்**
**தீங்கு சொல் லாத தெளிவும்**
**திறம் ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்**
**திருவடிக்கு ஆளாக்குவாய்**
**தாய் ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்**
**தலம் ஓங்கு கந்த வேளே!**
**சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வ மணியே!**

**இது, திருவருட்பா – தெய்வமணி மாலையில் 9வது பாடலாக அமைந்திருப்பது சிறப்பு!**

**- திருப்புகழ் அமுதன்**

# சைவநீதி

## கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே", என்றும்; "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்", என்றும், அப்பரடிகள் மனிதப் பிறவியை ஏற்றிப் போற்றுகிறார். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது,, என்பது ஔவையார் வாக்கு. மனிதர்களிடம்தான் ஆறாவது அறிவு எனப்படும் பகுத்தறிவு உள்ளது. உண்மையை உணர்ந்து கொள்ளவும்; உண்மையின் வழியில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், மனிதர்களுக்கு மட்டுமே இயலக்கூடியது. உண்மை என்பது மெய்ப் பொருள். "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிறது தமிழ்மறை. அந்த அறிவு மனிதரிடம் இயற்கையாக, இயலறிவாக இருக்கின்றது. மெய்ப்பொருள் என்பது இறைவன். அந்தப் பரம்பொருள்தான், அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் மூலமும் முதலுமாக உள்ளது என்ற உண்மையை உணர்ந்து, தான் யார் என்பதையும்; தம்மில் உள்ள குறைநிறைகளைத் தன்னை ஆராய்தல் மூலம் கண்டறிந்து, குறைகளை நீக்கி, நிறைவாழ்வு வாழ்ந்து, பிறவியின் நோக்கமாகிய வீடு பேற்றை அடைவதற்கு, இறைவனால் தமக்கு வழங்கப்பட்ட அரிய வாய்ப்பு இந்த மனிதப் பிறவி என்பதையும்; மனிதனின் ஆறாவது அறிவுதான் தெளிய வைக்கிறது. மனிதனைப், புலன் மயக்கச் செயல்களில் ஈடுபடவிடாது தடுத்து, இறையுணர்வு பெற்று, அறவழியில் வாழ்க்கையை இட்டுச் செல்ல மனிதனுக்கு உறுதுணையாக வருவது, இந்தத் தூய்மையும் மேன்மையும் மிக்க ஆறவது அறிவு ஆகும்.

ஒருவர், தன் எண்ணம், சொல், செயல் என்பவற்றின் மூலம் தனக்கோ அல்லது பிறருக்கோ; துன்பம் அல்லது தீங்கு விளைவித்தால், அது செய்யத்தகாத பாவகாரியம் ஆகும். பாவகாரியங்கள் ஒருவரின் சந்ததிகள் தோறும் தொடர்ந்து துன்பங்களைக் கொடுக்கும். ஒவ்வொரு செயலுக்கும் விளைவு நிச்சயமாக உண்டு. அது இறைநீதி. அதனாலே தான் ஒரு செயலைச் செய்வதற்கு முன், இறைவனை விசாரித்து, இறைவனின் ஒப்புதல் பெற்று, அச் செயலை ஆற்றவேண்டுமெனச் சைவநீதி கூறுகின்றது. இறைவனை விசாரித்தல் என்பது மனிதன் தன்னிடமுள்ள ஆறாவது அறிவை விசாரித்து, ஒப்புதல் பெற்று, கருமத்தை ஆற்றுதல் ஆகும். அந்த ஆறாவது அறிவு, ஆன்மீக அறிவு ஆக விளங்குகின்றது; நல்லது எது, கெட்டது எது? என்பதை உணர்த்தும் பகுத்தறிவு, அது. அந்த நல்லறிவை வளர்த்து, அதனை விசாரித்து, ஒப்புதல் பெற்றுக் கருமங்களை ஆற்றினால், வாழ்வில் நன்மைகள் நிறையும்; அமைதி நிலவும்; இன்பமே சூழும்; எல்லோரும் நல்வாழ்வு வாழ்வர்.

மனச்சாட்சியின்படி கருமமாற்றும்படி கூறப்படுவதும்; மனநீதி என்று சொல்லப் படுவதும்; இறைவனை விசாரித்து; அனுமதி பெற்று, ஒரு செயலைச் செய்யவேண்டு மென உரைக்கப்படுவதும், யாவும் மனிதனின் ஆறாவது அறிவைச் சுட்டுவதாகவே அமைகின்றன. மனிதனை உயர்திணையில் வைத்து இலக்கணகாரர் சிறப்பித் துள்ளனர். அந்தச் சிறப்பினைக் காப்பாற்றிக்

கொள்ளவேண்டிய கடப்பாடு, ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

**"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென்றுணர்".**

இறைவனை விசாரித்துக் கருமாற்றுதல் என்பது இறைவனால் அருளப்பட்ட வேதம், ஆகமங்கள் ஆகிய திருநூல்களிலும்; இறைவனை அதிட்டித்து நின்று சமய குரவர்கள், சந்தான குரவர்கள், அருளாளர்கள் மற்றும் அறிவர்கள், முனிவர்கள் ஆகியோரால் அருளப்பெற்ற திருமறைகள், திருமுறைகள், புராண இதிகாசங்கள், நீதி நூல்கள் ஆகிய புனித நூல்களிலும் கூறப்பட்டுள்ளவற்றைக் கற்றலும், கற்றபடி ஒழுகுதலுமாகும். "கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்", என்பது நாவலர் வாக்கு. ஒழுக்கத்தைத் தராத கல்வியினாலோ, அறிவினாலோ பயனில்லை.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா", என்ற வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து செயற்பட்டால், எமக்கு ஒரு பொல்லாப்புமில்லை. நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு நாங்களே கர்த்தாக்கள். நாம் துன்பங்களை அனுபவிக்கும் போது, பிறரை நோவதாலோ, பிறர்மேல் பழி சுமத்துவதாலோ ஒரு பயனும் இல்லை. "எய்தவனிருக்க அம்பை நோவதேன்" என்ற ஆன்றோர் வாக்கு, இதற்கு ஆதாரமாக உள்ளது. துன்பங்கள், தோல்விகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்; அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

"உற்றநோய் நோன்றல்"; உயிர்க்குறுகண் செய்யாமை இவை இரண்டையும் கற்றுக்கொண்ட பாடங்களின் அடைவுகள் ஆகும், என்கிறார் வள்ளுவப் பெருமான். நாம் அனுபவிக்கின்ற இன்பங்களும் துன்பங்களும் எம்மால் தேடப்பட்ட சொத்துக்கள் – முதுசொம்கள். அவற்றை அனுபவிக்கப் பூரண உரிமை பூண்டவர்கள். உரிமைகளை அனுபவிக்க மறுத்தல் ஆகாது; அவற்றை மறுக்கவும் முடியாது. அது இயற்கை நியதி; இறை நீதியும் ஆகும். தனக்கு நேர்ந்த துன்பங்கள், தோல்விகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; மற்றும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, துன்பம் தராமை ஆகிய இரண்டையும் வாழ்க்கையில் மேற்கொள்வோர் மேலோர் ஆவர்.

"தீதும் நன்றும் பிறர் தரவாரா", என்ற தமிழர் வாழ்க்கைத் தத்துவம் இன்று உலகத் தத்துவமாகிவிட்டது.

துன்பத்தை அனுபவிப்பதும், பொறுத்துக் கொள்ளலும்; மற்றும் தமக்கு நேர்ந்த துன்பங்களுக்குப் பிறரை நோவதும், பழிக்குப் பழி வாங்கலும், துன்பங்கள் விளைவிப்பதும் ஆகிய தீய செயல்களிலிருந்து விலகியிருத்தலும்; நீதியே என்று உணர்த்துவது சைவநீதி. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்", என்னும் திருமாமந்திரம் உலக நாடுகளில் செயலாகும்போது தான், உலக சமாதானம் எய்தப்படும். தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, தேச அமைதி, உலக அமைதி என்பவற்றை அடைவதற்கு, வழிப்படுத்துவது சைவநீதி. வாழ்க்கையில் நல்ல விளைவுகளை, நற்பயன்களை அறுவடை செய்ய விரும்புவோர், அவற்

றிற்கான நற்செயல்களில், நற்கருமங்களில் ஈடுபட வேண்டும். அதேவேளை, தீய செயல்கள், தீய கருமங்களைச் செய்யாது விலகியிருக்க வேண்டும். அது சைவநீதி.

"நீதி வழுவா நெறிமுறையில்", தமது வாழ்க்கையை நடத்திச் செல்பவர்களே உயர்ந்தோர், சான்றோர்என உலகத்தினால் போற்றப்படுகின்றனர். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று", என்பது பண்டைத் தமிழர் பண்பாடு. "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்", என்கிறார் வள்ளுவப்பெருமான்.

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அனைவரும், பிறப்பு முதல் இறப்பு வரை, வாழ்க்கைக்குத் தேவையான வளங்கள், வசதிகள், பொருள்கள் அனைத்தையும் பெற்று அனுபவிக்கும் உரிமை, சுதந்திரம், அவர்களுக்கு உண்டு. அவற்றை அறவழியில் நின்று பெற்றுக் கொள்ளுதல்; அளவு முறையோடு அனுபவித்தல்; பிற சந்ததியினருக்காகச் சேமித்தல், பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் இயலாதவர்களுக்கும் இல்லாதவர்க்கும் ஈதல், உதவுதல், நலன்பேணுதல் என்பன கடமை எனப்படுகிறது. அந்த வகையில் உரிமையும் கடமையும் கொண்டவர்கள் மனிதர்கள். மனிதன் ஆறாவது அறிவுதான் மனிதனை வழிப்படுத்துகிறது. ஆகவே நீதியாகவும் விளங்குகிறது. நீதியே சிவம்.

மனிதர்கள், தங்கள் உரிமையை அனுபவிப்பதிலும் கடமையை நிறைவேற்றுவதிலும், பிறரது உரிமையும் கடமையும் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ள மனிதன் கண்ட ஒழுக்க முறையே, நீதி எனப்படும் விழுமியம் ஆகும். எது நீதி? எது அநீதி என்பதை மனிதனுக்கு அறிவிப்பது, மனிதனின் ஆறாவது அறிவு. அந்த அறிவு, மனிதனுக்கு, வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியை அறிவுபூர்வமாக உணர்த்தி, மண்ணில் நல்ல வண்ணம் வாழ, நீதி நெறிமுறையைக் காட்டி; மனிதப் பிறவியின் இறுதிப் பயனாகிய முத்தியின்பத்தை அடைய உறுதுணையாகவும் அமைகின்றது.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக*
*உலகமெலாம்"*



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# திருத்தொண்டர் புராணமும் கந்தபுராணமும்

**சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

தமிழ் மொழியில் புராணங்கள் ஆயிரக் கணக்கில் பாடபட்டுள்ளன. அவற்றுள் ஒன்பது புராணங்களை அறிஞர் தேர்ந்துரைப்பர். அவையாவன : திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கோயிற் புராணம், சேது புராணம், காளத்திப் புராணம், காஞ்சிப் புராணம், திருக்குற்றா லப் புராணம், தணிகைம் புராணம் என்பன.

அவ்வொன்பது புராணங்களுள் மூன்று புராணங்களைக் கற்றறி வல்லுநர் கழறுவர். முன்னுரிமை கொடுத்து மொழியும் மூன்று புராணங்களாவன – பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பனவாகும். சிவபிரானுடைய மூன்று திருக்கண்களுக்கு ஒப்பாவன மூன்று புராணங்கள் என்று உவமிப்பர்.

அம்மூன்று புராணங்களில் திருத் தொண்டர் புராணம் கந்தபுராணம் இரண்டினையும் ஒப்பிட்டு நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருத்தொண்டர் புராணம் பாடியவர் அருண்மொழித்தேவர் என்னும் இளமைத் திருநாமமுடைய சேக்கிழார் நாயனா ராவார். கந்தபுராணம் கைவரப் பெற்றவர் கச்சியப்ப சிவாசாரியாராவர்.

சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் என்னும் அநபாயச் சோழ சக்கரவர்த்தி யின் அரசவையில் முதலமைச்சராக விளங்கியவர்.

கச்சியப்பர்ப்பிரான் காஞ்சீபுரம் குமரகோட்டத்தில் விளங்கிய அர்ச்சகருள் ஒருவரான சிவவேதியர் காளத்தியப்ப சிவாசாரியர் மைந்தர். உரிய காலத்தில் வேதமொடு ஆகமம் பயின்று வல்லுநராகி குமரகோட்ட அர்ச்சகர்களுள் ஒருவராக விளங்கியவர். சேக்கிழார் கி.பி. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். கச்சியப்ப சிவாசாரியர் கி.பி. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சகாத்தம் எழுநூற்றில் கந்தபுராணத்தை அரங்கேற்றினர் என்பர்.

சேக்கிழார் தில்லைச் சிற்றம்பலத்தில் இருந்து பெரியபுராணம் பாடினார்.

கச்சியப்ப சிவாசாரியர் காஞ்சீபுரம் குமரகோட்டத்தில் இருந்து கந்தபுராணம் பாடினார்.

சேக்கிழார் பெரியபுராணம் பாடத் தில்லைநாதர் 'உலகெலாம்' என்று அசரீதி வாக்கால் அடியெடுத்துக் கொடுத்தருளினார்.

கச்சியப்பர் கந்தபுராணம் பாடுவதற்குக் குமரகோட்டத்துக் குமரவேள், கனவில் வெளிப்பட்டுத் 'திகட சக்கரம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார். முருகப் பெருமானே புராணத்தில் திருத்தமும் செய்தருளினார்.

சேக்கிழார் அநபாயச்சோழ சக்கர வர்த்தியின் அறிவைத் தமிழ்ச் சைவத்தில் திசைதிருப்பப் பெரிய புராணம் இயற்றினார்.

கச்சியப்ப சிவாசாரியார் காஞ்சீபுரம் வாழ் பெரியோர் வேண்டுகோளுக்கும் முருகப் பெருமானுடைய ஆஞ்ஞையை யும் சிரமேற் கொண்டு கந்தனுக்குப் புராணம் கட்டுரைத்தார்.

சேக்கிழார் திருத்தொண்டர் புரா ணத்தில் அடியார் பெருமையை உலக றியச் செய்தார். கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணத்தில் கந்தன் காதையை காசினி அறியக் கட்டுரைத்தார். சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை ஆண் டொன்றில் சித்திரைத் திருவாதிரைத் தினத்தில் ஆரம்பித்து அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரைத் தினத்தில் அரங்கேற்றத்தை நிறைவு செய்தார்.

கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுரா ணத்தைக் காஞ்சீபுரம் குமரகோட்டத்தில் சைவ உலகம் நனி மகிழ் சிறக்க அரங்கேற்றினார்.

சேக்கிழார் பெரியபுராணம் அரங்கே றியதும் மக பூசை, மகேசுர பூசை உபசரிப்புப்பட்டமளிப்பு, கௌரவிப்பு ஊர்வலம் வருதல் முதலான சிறப்புக்கள் அனைத்தும் அரசர் முதல் ஆண்டி வரை அனைவரும் உள்ளன்போடு ஆற்றி னார்கள். கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் அரங்கேற்றியதும் சைவப் பேருலகு தனியான சிறப்புக்களைத் தாழ்வின்றி மேற்கொண்டது.

பெரியபுராண அரங்கேற்றத்தின் பின்பு பன்னிரண்டாம் திருமுறையாக அங்கீகரிக்கப்பட்டது. கச்சியப்ப சிவா சாரியர் கந்தபுராண நிறைவிற்கு மூன்று பாடல்களுக்கு முன்னதாக

"......வேற்றனி நாயகன் றன்புராண நன்னா யகமா மெனக்கொள்கவிஞ்ஞால மெல்லாம்" என்று ஒரு ஞான அன்புக் கட்டளையை என்புருகப் பணித்துள்ளார்.

பெரியபுராணம் நாலாயிரத் திருநூற்று எண்பத்தாறு விருத்தப் பாக்களால் பொருந்தியுள்ளது. கந்தபுராணம் பதினா யிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து விருத்தப் பாக்களால் வெற்றிநடை போடும். சேக்கிழார் 'உலகெலாம் என அம்பலவாணப் பெருமான் அருந்துதியோடு பெரியபுராணத்தைப் பேணுவார்.

கச்சியப்ப சிவாச்சாரியார் 'திகட சக்கரம்' என்று விநாயகப் பெருமான் வணக்கத்தோடு கந்தபுராணக் காதையைக் கட்டுரைப்பார்.

சேக்கிழார் திருத்தொண்டர்தொகைத் திருப்பதிகத்தை முதல் நூலாகவும் திருத் தொண்டர் திருவந்தாதியை வழிநூலாக வும் கொண்டு பெரியபுராணத் திருவருட் கடலில் மூழ்கித் திளைப்பார்.

கச்சியப்ப சிவாசாரியார் "முன்பு சூதன் மொழி வடநூற்கதை, பின்பு யான்றமிழ்ப் பெற்றியிற் செப்பு கேள்," என்று சொல்லிக் கந்தன் கதை கந்தபுராணத்தைக் கடைவார்.

சேக்கிழார் மாக்கதையைப் பாயிரப் பாடலை அடுத்து திருமலைச் சிறப்பு, திருநாட்டுச்சிறப்பு, திருவாரூர்த் திருநகரச் சிறப்பு திருக்கூட்டச் சிறப்பு என்று சிறப்பித்துச் செப்புவார்.

கச்சியப்ப சிவாசாரியார் கந்தன் காதையைப் பாயிரப் பாடலப் பாடிய

பின்பு கடவுள் வாழ்த்து, அவையடக்கம், ஆற்றுப் படலம் என்று ஆற்றுப்படுத்தி அமைவார்.

சேக்கிழார் குரிசில் திருக்குறிப்புத் தொண்டநாயனாருடைய புராணத்தில் செப்பிய காஞ்சீபுர நகரின் வளங்களை எல்லாம் திருநகரப் படலத்தில் வைத்து விளாசி விடுவார்.

பெரியபுராணம் முப்பொருள் உண்மையை மொழிவதில் முன்னிற்கும். கந்தபுராணம் பதி, பசு, பாசம் கதிகளை இயம்புவதில் பின்நிற்காது.

பெரிய புராணத்தில் சைவ சித்தாந்த சரக்குகளைத் தெட்டத் தெளிவாகக் காணலாம். கந்தபுராணம் முன்வினை பின்வினை தொல்வினை சூழ்வினை செய்வினை வினையை அறுக்கும் மார்க்கம் யாவையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டும்.

பெரியபுராணம் இரண்டு காண்டங்களால் நடப்பது. கந்தபுராணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. அது ஆறு முகப் பிரானுடைய ஆறுமுகங்கள் போலப், பெரியபுராணம் 63 தனியடியார்களையும் ஒன்பது தொகை அடியார்களையும் தொகுத்துப் பாடும்.

கந்தபுராணம் தேவேந்திரன் முதலாம் அமரர்களுடைய அல்லற்பாடுகளையும் பேசி, அவற்றை நீக்கி இறைவன் அமரர்களை மீட்டும் அரசிருக்கையில் அமர்த்திய அருளிப்பாட்டினையும் அருளும்.

பெரியபுராணம் பத்தியாய்ப் பரவினோர் பரகதி பெற்ற பேற்றிற்கு உரித்தாகும். கந்தபுராணம் வினையின் நீங்கி வீட்டின்பம் எய்துவதற்கு ஆற்றுப் படுத்தும்.

பெரியபுராணம் 'என்று மின்பம் பெருகு மியல்பினால்' என்னும் செய்யுளோடு முற்றுப்பெறும். கந்தபுராணம், "பாராகி யேனைப் பொருளாயுயிர்ப்பன்மை யாகிப், பேரா வுயிர்கட் குயிராய்...." என்னும் பாடலோடு பூரணமாகும்.

## வெற்றிபெற மூன்று வழிகள்

**ஒன்று ... மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.**
**இரண்டு ... மற்றவர்களைவிட அதிகமாகப் பணியாற்றுங்கள்.**
**மூன்று... மற்றவர்களைவிட குறைவாக எதிர்பாருங்கள்.**

**- வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்**

---

நீங்கள் எந்தப் பிரச்சினைகளையுமே சந்திக்காமல் அமைதியாகச் சென்று கொண்டிருந்தால், உங்கள் வாழ்க்கையில் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

**- சுவாமி விவேகானந்தர்**

# தெய்வக் குடும்பம்

**கி. வா. ஜகந்நாதன் அவர்கள்**

திருக்கடம்பூர் என்ற தலத்துக்கு எழுந்தருளினார் அப்பர் சுவாமிகள். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தார். உற்சவ மூர்த்திகளைத் தரிசிக்க வந்தார். சந்திரசேகரர் நடராஜர் ஆகிய மூர்த்தி களைத் தரிசனம் செய்தார். சோமாஸ் கந்தமூர்த்தியை அணுகினார். அருகிலே உமாதேவியார் வீற்றிருக்க தனக்கும், அத்தேவியாருக்கும் இடையிலே சின்னஞ் சிறு குழந்தை முருகன் எழுந்தருளியிருக்க அமர்ந்திருந்தான் இறைவன். உமையும் கந்தனும் ஒருங்கிருக்கும் இந்தக் கோலத்தை சோமாஸ்கந்தர் என்று பாராட்டுவர் ஸாஉமாஸ்கந்த இவ் அழகிய திருக் கோலத்திலே சிந்தையைப் பறிகொடுத்து நின்றார் அப்பர். இறைவன் அப்பனாகியும், அம்மையாகியும், பிள்ளையாகியும் இருந்து ஆருயிர்களுக்கு அருள்புரியும் வண்ணத்தை நினைந்து நினைந்து உருகினார்.

உலகத்து மக்கள் மனைவியை மணந்து பிள்ளைகளைப் பெற்று வாழ்கி றார்கள். உலகம் என்பது உயிர்க் கூட்டம். உயிர்கள் உடம்போடு உலாவுகின்றன. எல்லாப் பிராணிகளும் மனைவி களோடும், மக்களோடும் வாழ்கின்றன. மனைவி இல்லையேல் மக்கள் இல்லை. மக்கள் இல்லையேல் உலகம் தொடர்ந்து நிகழாது. இனப் பெருக்கம் இல்லை. ஆதலின் மனிதன் மனைவியோடு வாழ்கிறான். பிறகு மகனைப் பெறு கிறான். கணவன், மனைவி, பிள்ளை என்று மூவரும் சேரும்போது குடும்பம் முழுமையடைகிறது.

இப்படி அமையும் குடும்பத்தின் உருவத்துக்குக் கருவாக இருப்பது இறை வனுடைய திருவருள். மனிதன் மனைவி யோடு இணைந்து இன்புற்று மக்களைப் பெற்று வாழும் வகையை இறைவனே உலகத்தினருக்கு வகுத்தருளினான். மனிதக் குடும்பத்துக்கு தானே மூலக் கருவை அருளியவன் என்பதை இறை வன் குடும்பியைப் போல இருந்து காட்டுகின்றான். தானும் மனைவியையும், மகனையும் உடையவனாக திருக்கோலம் கொண்டு எழுந்தருளியிருக்கிறான். இறைவன் தனி நின்றபோது இயக்கமின்றி இருப்பான். அவனிடத்து அருள் வெளிப் பட்டபோது மாதிருக்கும் பாதியனாவான். அருள் நன்கு வெளிப்படுவதைக் காட்டு வது உமாபாகனாக இருக்கும் நிலை. அவ்வருள் பின்னும் மலர்ந்து முழு விரிவோடு நிற்பதே சோமாஸ்கந்த ருடைய திருக்கோலம். நம்முடைய குடும்பம் மருட் குடும்பம். இறைவனுடைய குடும்பம் அருட் குடும்பம்.

அம்மையும் அப்பனும் குமரனுமாக எழுந்தருளிய தெய்வக் குடும்பத்தைக் கண்டார் அப்பர். மூவர் என்று தனித் தனியே பார்க்கும்படி தோன்றினாலும், மூவரும் ஒன்றின் சுவடுகளே. மூவரும் ஒருவரே. ஆதலின் மூவரையும் ஒன்றாக வைத்து சோமாஸ்கந்தர் என்று வழங்கு வது மரபு. அப்பர் சுவாமிகள் தமிழர் தம் தெய்வம் என்று போற்றுகின்ற முருகனைக் கண்டார். கடம்பமாலையை அணிந்து விளங்கும் அப்பெருமானை "இதோ

**நம்கடம்பன்"** என்று அன்புகூரக் கும்பிட்டார்.

கடம்பணியும் முருகனுக்கு அருகிலே அவனைப் பெற்றவன் வீற்றிருந்தான். இறைவனுடைய அருளுருவாகிய அப் பெருமாட்டியை "இதோ நம் கடம்பனைப் பெற்றவள்" என்று கும்பிட்டார். பிறகு அருகில் இருந்த இறைவனைப் பார்த்தார். தேவியோடும், குமரனோடும் குடும்பியாக அருள் மலர்ந்து காய்த்துக் கனிந்த உருவத்தில் எழுந்தருளியிருக்கும் அப்பனைக்க்ணடு "இதே நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்று கும்பிட்டார். இது கடம்பூர் என்ற தலத்தில் நிகழ்ந்தது. அந்தத் தலத்துக் கோயில் கரக்கோயில் என வழங்கும். கடம்பூரைக் கடம்பை என்றும் சொல்வதுண்டு. தாம் கண்ட காட்சியைச் சொல்லலானார் அப்பர்.

*நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்.*

இவ்வாறு தானும் ஒரு குடும்பி போல இறைவன் தோற்றுவானேன்? அவன் இன்பமும் உண்மையும், ஞானமும் ஒன்றாக இணைந்த சச்சிதானந்தமூர்த்தி. அவன்தன் அருள் சக்தியாக வெளிப் படுத்தினான். அவன் வேறு, அவள் வேறு, முருகன் வேறு என்று தோன்றினாலும், மூவரும் ஒருவரே. இப்படி எல்லாம் கோலம்பூண்டு இறைவன் திருவிளை யாடலைச் செய்வதற்குக் காரணம் ஆருயிர்களுக்கு கருணை பாலிக்க வேண்டும் என்பது தான். உலகை எல்லாம் தாங்கும் பொருட்டுக் குடும்பியாக இருக்கிறான். உலகம் முழுவதுமே பெரிய குடும்பம். இந்தக் குடும்பத்துக்கு அவன் தலைவன், அவள் தேவி. தலைவி - குழந்தை இளவரசன். மூவரும் காப்பத னால் உலகம் வாழ்கிறது. உலகத்தில் உள்ள உயிர்களைக் காப்பாற்றுவதை தன் கடமையாகப் பூண்டவன். அதைத் தெரிவிக்கவே அப்பனும், அம்மையும், பிள்ளையுமாய் எழுந்தருளியிருக்கிறான். இந்த நினைவு திருநாவுக்கரசருக்கு உண்டாயிற்று.

**தன் கடன் அடியேனையும் தாங்குதல் என்று பாடினார்.**

"ஒன்றுக்கும் பற்றாத என்னையும் தன் அருளினால் பாலிப்பதை கடமையாக ஏற்றுக்கொண்ட பெருமான் அவன்" என்று நினைந்து உருகினார்.

அவனுக்கு நம்மைக் காப்பது கடமை யானால் நமக்கு ஒரு கடமையும் இல்லையா? அவனுக்கு நாம் துணை செய்யலாம். ஆனால் நம் துணையினால் அவனுக்கு ஆவது ஒன்றுமில்லை. அவ னுக்கும் அவனுடைய குழந்தைகளாகிய ஆருயிர்களுக்கும் வேண்டிய தொண்டு களைச் செய்துவிட்டு நான் செய்தேன் என்ற அகங்கார முனைப்பு இன்றி அவன் அருளிலே கரைந்து கிடப்பது நாம் செய்யவேண்டிய கடமை.

**என் கடன் பணிசெய்து கிடப்பதே**

இறைவன் பல திருக்கோலங்களைக் காட்டி எப்படியாவது இவன் உய்ய மாட்டானா என்று மனிதனைப் பார்த்து ஏங்குகின்றான். எல்லாரையும் தாங்கும் பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டிருக் கிறான். ஆதலால் நாம் எப்படி வாழ் வோம். ஏது செய்வோம் என்று கவலைப் படவேண்டிய அவசியமே இல்லை.

நம்மைக் காப்பது அவன் தலைச்சுமை. நாம் தொண்டுகளைச் செய்து கொண்டு பொறுப்பு ஏதும் இன்றிக் கவலையும் இன்றி அவன் ஆட்டும்படி எல்லாம் ஆடி நம்முடைய செயல் என்று ஒன்றும் இன்றிக் கிடப்பதுதான் முறை என்கிறார் அப்பர். அதுதான் கர்மயோகம், அதுதான் ஜீவ போதம் அழிவதற்கு உரிய வழி. அது தான் உலகம் வாழ தொண்டு ஆற்றும் நெறி.

**நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்கடன் அடியேனையும் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே.**

இத்திருப்பாட்டு நான்காம் திருமுறையில் பத்தொன்பதாம் பதிகத்தின் ஒன்பதாம் பாட்டு.

*(ஆசிரியரின் "திருமுறை மலர்கள்" நூலிலிருந்து)*

## ஸ்ரீ சிவசுப்பிர முனிய சுவாமி புகழ் பாடு

ஸ்ரீ சிவ சுப்பிர முனி சுவாமிகள்
புகழினை யேபாடும்
சீர்பெறு சைவச் சுடரொளி மேற்கினில்
ஏற்றிய திறம்பாடும்
ஆசிசெய் யோகர் அருந்தவக் கொழுந்தென
வந்தவர் புகழ்பாடும்
அரன்திரு மறைகள் திசைதொறும் பரவிடச்
செய்தவர் புகழ்பாடும்
காசினி புகழ்சிவ நெறியின் மகிமை
மேற்கிலும் இசைகூட்ட
தந்தவர் யோகர் தருவதவக் கொழுந்தென
ஹவாயிலும் ஒளிபரவ
மாசில் சிவநெறி மகிமையு ணர்ந்தவன்
மார்க்கமும் சிறந்தோங்க
மதிநிறை ஐப்பசிச் சித்திரை தனிலிறை
ஒளிபெறு புகழ்பாடும்.

*கவியாக்கம்*

**சு. குகதேவன்**



பொது குசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# பன்முக ஆளுமையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன்

**புலேந்திரன் சசிரஜனி அவர்கள்**

'பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரன்போல்....' நாடறிந்த கல்வியாளனும் சொற்பொழிவாளருமான அருட்கலை மாமணி, சித்தாந்த பண்டிதர், சொற்பேராழி, செஞ்சொற் கொண்டல், இன்னிசைச் சொல்வேந்தன், வாகீச கலாநிதி டாக்டர் கனகசபாபதி – நாகேஸ்வரனை எம்.ஏ, பி.எச்.டி தெரியாதவர் இப்பாரினில் இருக்கமுடியாது என்றே கூறலாம். இவர் மணிபல்லவம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மரபுவழி அறங்காவலராவார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலை தமிழ் விரிவுரையாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையின் முன் னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் பகுதிநேர அறிவிப்பாள ரும் முதுநிலை நேர்முக வர்ணனையாள ருமான முனைவர் கனகசபாபதி நாகேஸ் வரனுக்கு சப்ரகமுவ பிரதேசத்துப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம்பெற்று வெளி யேறிய – வெளியேறும் விடுகை நிலை யிலுள்ள அவர் தம் மாணவர்கள் மாணவி களால் கலாநிதியின் சமூக, சமய, இலக்கிய, ஆய்வறிவுப் பணிகளையும் புலமை நலத் தொழிற்பாடுகளையும் வாழ்த்தியும் பாராட்டியும் விதந்தும், பெருமைப்படுத்தி யும் வெகுவிரைவில் மணி விழாவொன்றை வெகு கோலாகலமாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மரபுவழி அறங்காவலர் வம்சத்தின் தவசிரேஷ்டர் ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி எனும் அருள்மா மணிக்கும் ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகி லாம்பாள் என்னும் வித்துவாட்டிக்கும் மூத்தபுதல்வனாக வாகீச கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் (05.08.1952இல்) பிறந்தார். கலாநிதி நாகேஸ்வரன் இலக்கிய ஆய்வாளர், கலைஞர், கல்விமான், இன்னி சைச் சொற்பொழிவாளர், மொழி பெயர்ப் பாளர், நேர்முக வர்ணனையாளர், பண்ணி சைக் கலைச்செல்வர் எனும் பன்முகப்பட்ட உன்னத ஆளுமைகளின் திருவுரு.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியா சாலை, நயினை மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட குமார மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியின் மேற்பார்வையின் கீழ் 'ஈழத்து நவீன தமிழ்க் காவியங்கள்' எனும் தலைப்பில் ஆய்வு செய்து தமிழிலக்கியத்தில் B.A. (Hons) கலைமாணி சிறப்புப் பட்டத்தி னையும் (Second Class) அதன் பின் பேரா சிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின் மேற்பார்வையின் கீழ் எம்.ஏ. (முதுகலை மாணி), பட்டத்தினையும் முறையே 1979, 1988ஆம் ஆண்டுகளிற் பெற்றார். பேரா தனைப் பல்கலைக்கழகத்திலே 2008இல் தமது கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றார். இவரெழுதிய 'ஈழத்துச் சுதேச தமிழ் மருத்துவ இலக்கியங்கள் – மொழி, இலக்கிய ஆய்வு' என்னும் ஆய்வேடு மணிவிழா அன்று நூலாக வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்து மொழித் துறையிலே முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும் 1996 ஆம் ஆண்டிற் பணியேற்றார். இதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குத் தமிழ்த்துறையிலே 1986ஆம் ஆண்டு முதல் உதவி விரிவுரையாளராகவும் சித்த மருத்துவத்துறையிலே தமிழ் விரிவுரையாளராகவும் திகழ்ந்தார். யாழ் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலும் (Tamil Virtual University) கலைப்பட்டதாரிகள் பலரை உருவாக்கினார். தமிழின் பல்வேறு துறைகளிலேயும் நிரம்பிய ஈடுபாடு கொண்டுள்ள இவர் இலக்கியம், சமூகம், கலை, சமயம், வரலாறு, தொல் பொருளியல், அரசறிவியல், இதழியல், கல்வி பண்பாடு, மொழி, வாழ்க்கை, வரலாறு, பத்திரிகையியல். வானொலி, தொலைக்காட்சி, திறனாய்வு, நாடகம் எனும் துறைகளில் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1980களில் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் 1985வரை ஐந்தாண்டுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராவும் பகுதிநேர அறிவிப்பாளராகவும் நேர்முக வர்ணனையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்திய அலஹாபாத்திலும், திருச்சியிலும் மலேசியாவிலும் லண்டனிலும் சுவிஸ்லாந்திலும் நடைபெற்ற இலக்கிய, சமய, சர்வதேச மாநாடுகளிலே 1979, 1983, 2002, 2004 ஆம் ஆண்டுகளிலே பங்குபற்றினார். லண்டன், கனடா ஆகிய நாடுகளிலே வெளியிடப்பட்டுள்ள சமய இலக்கிய மலர்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் தமிழிலே பிரசுரமாகியுள்ளமை பெருமைக்குரிய விடயமே. U.K. தமிழ் வானொலியிலும், கனடாவின் கீதவாணியிலும் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அம்மன் உபாசகித் தாயாராது 'அருளொளி' நிகழ்ச்சிகளிலே பங்கேற்று ஆன்மீகப் பேருரைகளை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தேமதுரத் தமிழ் ஓசையினை உலகெலாம் பரப்பும் கடப்பாட்டில் கால் நூற்றாண்டு காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் சைவநற்சிந்தனை, கலைக்கோலம், இலக்கியப் பேச்சுகள், இந்து சமயப் பேச்சு, ஞானச் சுடர், கலந்துரையாடல்கள், சொல்வளம் பெருக்குவோம், சைவாலயத் திருவிழாக்களின் நேர்முக வர்ணனைகள், நேர்காணல், கலந்துரையாடல்கள், அரங்கம் என்பவற்றிலே பங்கேற்று இன்றுவரை சேவையாற்றி வருவதும் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்ததே.

அருள்மொழிச் செல்வன், செஞ்சொல் வாரிதி, இன்னிசைச் சொல்வேந்தன், செஞ்சொல்வாணர், மணியொலிவாரி, நவரஸக் கலைஞானி, சொற்ரோழி, சித்தாந்த பண்டிதர், அருட்கலை மாமணி, வாகீச கலாநிதி எனும் கௌரவ பட்டங்களையும் பெற்றுள்ள இவர், அகில இலங்கை சமாதான நீதிபதியுமாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலாசுரபி (1979), புராணம், தடுத்தாட்கொள் புராணம் (பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கான பாடநூல்) – 1989, சிவதத்துவமலர் (1996), நவநாதம் (1998), பக்தி மலர் (2004) என்னும் நூல்களின் ஆசிரியரும் இவரே.

முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் பாடசாலை மாணவப் பருவத்திலேயே இதழாசிரியராகச் சிறப்புப் பணியாற்றினார்.

***(நன்றி : தினக்குரல் 28-10-2012)***

# சிறுவர் விருந்து

## நா காக்க

- சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வணக்கம்! இனிய பொங்கல் வாழ்த்துக்கள்! "எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றறியேன் பராபரமே" என்று தாயுமானவர் என்ற மகான் பாடியிருக்கிறார். எல்லோரும் இன்புற்று வாழ நாமும் பிரார்த்தனை புரிவோம்.

மனதினால், வாக்கினால், உடம்பினால் பிறருக்குத் துன்பம் தராமல் வாழுகிற வாழ்வுதான் சிறந்த மனித வாழ்வு. நமது மனம், சொல், செயல் என்பவற்றை நாம் நமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். மனம் போனபடி நடப்பது, பேசுவது, செயல் புரிவது முடிவில் நமக்கே இடரைத் தரும். இதை உணர்த்தும் ஒரு சிறு கதையை இப்போது கேளுங்கள். இது இமயஜோதி சிவாநந்த முனிவர் சொன்ன கதை.

ஒரு ஊரில் கல்வி அறிவிற் சிறந்த மனிதர் ஒருவர் இருந்தார். வசதி உள்ளவர். தனக்கு உதவும் இரண்டு பணியாட்களுடன் தனிமையில் வாழ்ந்து வந்தார். ஊரவர் என்ன உதவி கேட்டாலும் இயன்றவரை உதவி செய்வார். எல்லோருடனும் பணிவோடும் அன்போடும் பழகுவார். அவருடைய இனிய பேச்சைக் கேட்பதற்கும், அவர் தரும் இனிப்புப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவருடன் எப்போதும் ஒரு சிறுவர் பட்டாளம் இருக்கும். அயல் ஊரில் இருந்தெல்லாம் நல்லவர் பலர் இவரைத் தேடி வருவார்கள். நல்லதைப் பேசி, நல்லதையே கேட்டுக் கொண்டு செல்வார்கள்.

எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கும் இந்த மனிதரிடம் கூட அவ்வூரில் உள்ள சிலருக்கு வெறுப்பும், பகையும் ஏற்பட்டது. தங்களுக்குள் கூடிக் கூடி பேசி பல புனைவுகளைப் புனைந்தார்கள். அவற்றையே பலர் கூடும் இடங்களில் பெரிதாகப் பரப்பினார்கள். பலர் இந்தப் பொய்களை நம்பினார்கள். அந்த நல்ல மனிதரிடம் ஊரே பகை கொண்டது. அவரும் 'எல்லாம் இறைவன் செயல்' என்று வழிபாட்டிலும், யாத்திரையிலும், தமது நாட்களைச் செலவிட்டார்.

ஊரில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அதைத் தீர்த்து வைப்பார் இல்லை. பஞ்சம் வந்தது. உதவுவார் இல்லை. மறுபடியும் அந்த தாம் ஒதுக்கிவைத்த மனிதரிடம் உதவிகேட்டுச் சிலர் சென்றார்கள். அவரும் அன்புடன் உதவினார்.

அப்படி உதவி பெற்றவர்களுள் ஒருவனுக்கு மனச்சாட்சி இடித்தது. அவன் போய் அந்த மனிதரிடம் மன்னிப்புக் கேட்க விரும்பினான்.

ஒருநாள் அந்த மனிதர் வீட்டுக்கு இவன் சென்றான். தயக்கத்தோடு தான் முன்பு பேசியவற்றை மறந்து மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டான். அவரும் மௌனமாக

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார். முடிவில்;

"நல்லது அப்பனே! தயவு செய்து எனக்கு ஒரு நல்ல பஞ்சுத் தலையணை கொண்டு வருவாயா?" என்று கேட்டார்.

"அட இந்தப் பெரியவர் நம்மிடம் உதவி கேட்கிறாரே!" என்ற மகிழ்ச்சியுடன் அவன் போய் நல்ல புதிய பஞ்சுத் தலையணை ஒன்றைப் பக்குவமாக எடுத்துவந்தான்.

"கொண்டுவந்தாயா? நன்றி! தயவு செய்து இந்தத் தலையணையின் தையலைப் பிரித்துப் பஞ்சை வெளியே உதறிவிடுவாயா?" என்றார் அந்தப் பெரியவர். "ஆகா! இதோ உடனே!" என்று தலையணையைக் கிழித்துப் பஞ்சை உதறினான் அவன். பஞ்சு காற்றில் வேகமாகப் பறந்து பறந்து போயிற்று.

"இப்போ பார் நண்பா! இந்தப் பஞ்சை எல்லாம் மறுபடி தலையணையுள் அடைத்து விட்டுத்தா! என்றார் பெரியவர்.

"அதெப்படி? பஞ்சு காற்றில் பறந்துவிட்டதே" என்றான் இவன்.

பார்த்தாயா! நாம் பேசும் கோளும் குறைகளையும், பழியும் பாவமும் இப்படித்தான். அதைத் திரும்பப் பெற முடியாது. பலனை அனுபவிக்க வேண்டியது தான்" என்றார் பெரியவர்.

பார்த்தீர்களா? பிள்ளைகளே! சூதும் வாதும் வேதனை செய்யும் என்பதை சிறிது சிந்திப்போமா?

யேசுநாதர் என்ற மகான் பிறந்த நல்லநாள் கிறிஸ்துமஸ் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது. யேசு கிறிஸ்து இரக்கமும் அன்பும் மிகுந்தவர். ஒருமுறை மிகவும் ஒழுக்கம் தவறிய பெண் ஒருவரை அவர் முன் கொணர்ந்து "இவளுக்கு என்ன தண்டனை கொடுப்பீர்கள்" என்று கேட்டார்கள். "அவளையும் மன்னிப்போம்" என்றார் யேசு கிறிஸ்து. கூச்சல் குழப்பம் இட்ட பலரும் அவரைப் பரிகசித்தபடி, "இவளைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள்.

"சரி, அப்படியே செய்யுங்கள்! கடவுள் சாட்சியாக ஒரு பிழையுமே செய்யாத ஒருவர் இவள் மேல் முதற் கல்லை எறியுங்கள்!" என்றார் யேசு. கூடிக் கூச்சலிட்டவர்களில் யாராவது ஒரு புனிதர் இருந்திருப்பாரா?

எல்லோரும் மௌனமாகக் கலைந்து சென்றார்கள். இறைவன் எங்கு மிருக்கிறான். நம்மை உள்ளும் புறமும் அறிந்தவன் கடவுளே. எனவே; நாம் நம்மையே திருத்தவேண்டும். பிறரைக் குறைகூறுவதை எந்தச் சமயமும், எந்த அறிஞர்களும் ஏற்கவில்லை என்பதை அறிந்து, அன்பினால் உலகை ஆள முயலவேண்டும்.

**"யாகாவாராயினும் நா காக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"**

என்ற திருக்குறளைச் சிந்தித்து வாழவேண்டும்.

# குடற்புண் / குன்மம் (Ulcer)

**Dr. S. டிசிஜயந்தி அவர்கள்**
*துர்க்காதேவி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை*

இரப்பையும் சிறுகுடலும் சேர்ந்த செரிமானப் பகுதியின் உட்புற மேற்பகுதியில் ஏற்படும் புண்ணை குடற்புண் என்கிறோம். அதாவது இப்பகுதியில் ஒருவிதமான அமிலம் (HCl – கைதிரோகுளோரிக்கமிலம்) சுரக்கப்படுகிறது. இது சாதாரணமாக எல்லோரிலும் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே (balance) சுரக்கப்படுகிறது. இதன் அளவில் மாற்றம் ஏற்படுமிடத்து இரைப்பை (stomach), சிறுகுடலின் முற்பகுதி (duodenum) என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வமிலமானது சாதாரணமாக உணவு சமிபாடு, பக்றீரியாக்களை அழித்தல் போன்ற செயல்களைச் செய்கிறது.

## குன்மம் ஏற்படுவதற்கான காரணங்கள் / அதிகரிக்கச் செய்யும் காரணிகள்

1) நேரம் தவறி உணவு அருந்துதல்.
2) அதிக காரம், புளிப்பு போன்றவற்றை உண்ணல்.
3) குடிப்பழக்கம், புகைத்தல்.
4) மருந்துகள் (Antinflamatory drugs) – மூட்டு நோ (Arthritis), (muscular pain – தசைப்பிடிப்பு போன்றவற்றின் மருந்துகள், Asprin, Disprin போன்ற மருந்துகளை அதிகம் பயன்படுத்தல்.
5) கிருமித்தாக்கம் (Infection - H.pylori எனும் பற்றீரியாவின் தாக்கம்.
6) மன உளைச்சல், அமைதியின்மை, நித்திரை குறைவு.
7) சில நோய்நிலைகள் – கட்டிகள், ஈரல், சிறுநீரக நோய்கள்.

## அறிகுறிகள்

1) வயிற்றின் மேற்பகுதியில், நடுவில் வலி, எரிவு காணப்படல். சில வேளைகளில் உணவு உண்டபின் அதிகரித்தல்.
2) உணவானது புளித்து மேல் நோக்கி வருதல்.
3) வயிறு ஊதுதல், வயிறு முட்டாக இருத்தல், வயிற்றில் ஒருவித அசாதாரண நிலையை உணருதல்.
4) குறைந்தளவு சாப்பிட்ட உடன் வயிறு நிறைந்த மாதிரி உணர்வு.
5) சிலரில் நெஞ்சுவலி, நெஞ்சு முட்டாக இருத்தல் போன்ற உணர்வு.
6) வயிற்றுப்புரட்டல், வாந்தி.
7) கருமை / கடும் நிறத்தில் மலம் வெளியேறல்.
8) சாப்பிட்ட உடனடியாக மலம் கழிக்கவேண்டிய உணர்வு.

போன்றவற்றில் ஏதாவது ஒன்றோ பலவோ அறிகுறிகள் தென்படும்.

## இதற்கான பரிசோதனைகள்

1) (Endoscopy) என்டஸ்கோபி
2) H.pylori பக்றீரியாவைக் கண்டறிவதற்கான சோதனை (A test to detect the H.pylori bacterium.
3) Biopsies.

## இதனைக் குறைப்பதற்கு / தடுப்பதற்கான ஆலோசனைகள்


1. உணவினை 3 வேளைகளும் நேரம் தவறாது உண்ணல்.

உ–மாக – காலை உணவு 8 மணிக்கு முன்
மதியம் – பகல் 1.00 மணிக்கு முன்
இரவு – 8.00 மணிக்கு முன்.

2. அத்துடன் காலை 10 மணி, மாலை 4 மணி அளவில் கிறீம் அற்ற பிஸ்கட் (உ–ம்) cream cracker போன்றன) ஒன்று அல்லது இரண்டு உண்ணுவதுடன் பசும்பால் அல்லது பால்மாக்களை கரைத்து அருந்துதல்.
3. இலகுவில் செரிக்கக்கூடிய / சமிபாடடையக்கூடிய உணவுகளை உண்ணல். உ–ம் : இடியப்பம், நன்கு அவிந்த சோறு, பிட்டு எனில் தேங்காய் தவிர்த்தல்.
4. உணவில் உறைப்பு / காரம், அதிக புளிப்பு, எண்ணெய் என்பவற்றைத் தவிர்த்தல்.
5. தினமும் சீரகத்தூள் அதிகம் சேர்த்த கறி, நீற்றுப்பூசணி, இலை வகைகள், வாழைப்பொத்தி என்பவற்றை உணவில் சேர்த்தல்.
6. பாண், பாண் பொருட்களைத் தவிர்த்தல் சிறந்தது.
7. தினமும் மூன்று லீற்றர் நீர் அருந்துதல் சிறந்தது.
8. குன்மம் உள்ளவர்கள் தினமும் காலை வேளையில் இளநீர் குடிப்பது சிறந்த பலனைத் தரும்.
9. காலையில் 1 தேக்கரண்டி சீரகத்தூள், சிறிதளவு வெந்தயம் என்பவற்றை உட்கொள்ளல்.
10. மருந்துகளை அளவுக்கதிகமாகவும், வைத்திய ஆலோசனை இன்றியும் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
11. வெள்ளறுகினை முறைப்படி குடிநீரிட்டுப் பருகுதல்.
12. கோரைக்கிழங்கை குடிநீர் செய்து பருகுதல்.
13. இளம் காய் கறிகள் சமைத்து உண்ணல் உத்தமம்.
14. பிரண்டை, கொத்தமல்லி இலை, புதினா போன்றவற்றை துவையல் / சம்பல் செய்து உண்ணவும்.
15. கற்றாளை சோறினை நன்கு நீரில் கழுவி தினமும் உண்டுவர குன்மம் தீரும்.
16. தியானம், யோகாசனம் என்பற்றின் மூலம் மன அமைதி, நித்திரை என்பவற்றை ஏற்படுத்துல் வேண்டும்.
17. புகைத்தல், மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்

இவற்றிற்கு மேலாக கிருமித்தாக்கம், வேறு நோய்நிலைகளிலும் ஏற்படுவதால் வைத்திய ஆலோசனைப்படி மருந்துகளை ஒழுங்கான முறையில் பாவிப்பதன் மூலம் குன்ம நோயிலிருந்து பூரணமாக விடுபட முடியும்.

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் - 2013

## ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்களின்

## 88ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில்

## கௌரவிக்கப்பட்ட சேவையால் நிறைந்த பெருமக்கள்



# சிரேஷ்ட வைத்தியகலாநிதி நல்லூர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி அவர்கள்

சங்கானை பொன்னுத்துரை தம்பதிகளுக்கு 1940இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் வைத்தியக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்து 1965இல் வைத்திய கலாநிதியானார்.

வைத்தியத்துறையில் இலண்டனில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்த இவர் பொது வைத்திய விசேட நிபுணராக **(MRCP)** 1977இலும், 1987இல் **FRCP**ம் பெற்று கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பதுளை, மாத்தறை வைத்தியசாலைகளிலும் இறுதியாக யாழ் போதனா வைத்தியசாலையில் பொது வைத்திய விசேட நிபுணராக சேவையாற்றி 1977இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று தனியார் வைத்தியசாலைகளிலும் தனது சேவையைத் தொடர்ந்தார். 1980இல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைந்து சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

ஜெய்ப்பூர் **(JCDR)** எனப்படும் மாற்று வலுவுள்ளோர் புனர்வாழ்வு நிலையத்தில் 1987 முதல் இற்றைவரை செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகளை வகித்து 2008 முதல் அந்நிறுவனத்தின் தலைவியாகச் செயற்பட்டு வருகின்றார். இவரது கணவர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி அவர்கள் சத்திரசிகிச்சைக்கு மயக்கமருந்து **(Anathetist)** வழங்கும் சிகிச்சை நிபுணராவார். இவரது மக்கள் மூவரும் வைத்தியத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இவ்வாறாக இவரது குடும்பமே வைத்தியத்துறையைச் சார்ந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். மானிட சேவை, சத்தியசாயி பாபாவைப் பின்பற்றி ஆன்மீக ஈடேற்றம் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ள வைத்தியகலாநிதி ஜெயதேவி கணேசமூர்த்தி அவர்கள் வைத்தியத்துறையிலும் மானிட சேவையிலும் ஆற்றிவரும் சேவையைக் கௌரவித்து அன்னை சிவத்தமிழ் விருதினை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.



### புலவர் சமயப்பெரியார் குப்பிளான் மாதாஜி
### சிவமயச்செல்வி
# ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார்
### (இளைப்பாறிய ஆசிரியர்)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் குப்பிளான் என்னும் கிராமத்திலே 12.11.1931இல் தந்தை சீனியர் சின்னையா அவர்களுக்கும் தாய் சின்னையா உமையாள் அவர்களுக்கும் மகளாகப் பிறந்து இன்று "தொண்டுபடு கிழவி" என எண்பது ஆண்டு அகவையைப் பூர்த்தி செய்து குப்பிளான் பதியில் வாழ்பவர் புலவர் மாதாஜி அவர்கள். இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்ற கல்வி மேன்மைச் சிறப்புடையவர். புலவர் மாதாஜி அவர்கள் தமது அளப்பரிய முயற்சியின் பயனாக இதுவரை பதினாறுக்கு மேற்பட்ட நூல்களை சைவத்தமிழ் உலகுக்கு எழுதி வெளியீடு செய்து உபகரித்துள்ளார்.

நாவலப்பிட்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலே தமிழ், சைவசமய பாடங்களில் சிறப்பாசிரியராகக் கடமை ஆற்றியுள்ளார். 1965, 1982, 1984 ஆண்டுகளிலே இலங்கை வானொலியில் சைவ நற்சிந்தனை நிகழ்த்தியுள்ளார். தமது மென்மையான குரலிலே சைவப் பேருண்மைகளை நிகழ்த்தும் தனிச் சிறப்புப் பெற்றவர் புலவர் மாதாஜி அவர்கள். மாதாஜி அவர்கள் திருச்சி மாவட்டத்திலுள்ள திருஈங்கோய்மலை ஸ்ரீலலிதா சமாஜத்தில் சந்நியாசம், ஸ்ரீவித்தியாமந்திரம் ஆகியன பெற்று ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி என்ற சந்நியாசநாமம் பெற்றார். மாதாஜி அவர்கள் கிளிநொச்சியில் நடாத்தப்பெற்ற குருகுலத்தின் பெண்கள் பகுதிக்கு மேற்பார்வையாளராக இருந்து பணியாற்றினார். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் எமது துர்க்கா மகளிர் இல்லத்தில் இணைந்து சைவத்தமிழ்ப் பணிகள் புரிந்தார். இன்று தமது குலதெய்வமான சொக்கர்வளவு சோதி விநாயகர் ஆலய மடத்தில் தங்கியிருந்து சிவபூசையும், தியானமும், நாபஜெபமும் புலவர் அவர்களின் நித்தியசாதனைகளாகும். இங்ஙனம் தமது வாழ்வை ஆன்மீக ரீதியில் அர்ப்பணித்துக் கொண்ட மாதாஜி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இவ்வாண்டு அன்னை சிவத்தமிழ் விருது வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.



# உயர்திரு. நடராசா செல்வநாயகம் அவர்கள்
## தெல்லிப்பழை

**(முன்னாள் உபதலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)**

நடராசா – மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனாக 1939.11.19இல் செல்வநாயகம் பிறந்தார். தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியா சாலையில் கல்வி கற்று மக்கள் வங்கியில் எழுதுவினைஞராகச் சேர்ந்து அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் தரம் பெற்று மக்கள் வங்கி சுன்னாகம் கிளை உதவி முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். தமது பிறப்பிடமான தெல்லிப்பழை மகாதனையில் மாதனை சனசமூக நிலையம், மாதனை வைரவர் ஆலய சபை போன்ற சமூக நிறுவனங்களில் சமூகப் பணியாற்றி தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான நிர்வாக சபைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

துர்க்காதேவி தேவஸ்தான வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் ஆரம்ப காலத்தில் சிரமதான இயக்கமாகச் செயற்பட்ட வேளையில் ஏனைய இளைஞர்களுடன் இவரும் இணைந்து தனது பங்களிப்பை வழங்கினார். சிரமதான இயக்கமானது **1965**இல் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாகப் பரிணமித்தபோது அதில் இணைந்ததுடன் அவ் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டார். இவரது அர்ப்பணிப்புக்களைக் கண்ணுற்ற அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் 1970இல் இவரைத் தேவஸ்தான நிர்வாக சபையில் இணைத்துக் கொண்டார். நிர்வாக சபையில் திருப்பணிக்குழு, நிதிக்குழு என்பவற்றில் அங்கம் வகித்து சுற்றுமதில் அமைப்பு, இராஜகோபுர அத்திவாரம், சித்திரத்தேர் திருப்பணி, நிதிதிரட்டுதல் போன்ற பணிகளில் தனது கடமைகளைச் சிறப்பாக ஆற்றினார். இடப்பெயர்வுகளின் போது கோயில் நிர்வாக அமைப்புகள், மகளிர் இல்லம் ஆகியவற்றை உசன் கந்தசுவாமி கோவிலுக்கு இடமாற்றுவதில் முன்னின்று உழைத்தார். காலக் கிரமத்தில் நிர்வாகசபை உபதலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்னை துர்க்காதேவிக்கு பல தசாப்தங்கள் தொண்டு செய்யவும் நிர்வாகசபையில் அங்கம் வகிக்கக் கிடைத்தமையையும் தனது வாழ்க்கையில் கிடைத்த பேரின்பம் என மகிழ்வுறும் திரு. செல்வநாயகம் அவர்களுக்கு அவர் ஆற்றிய பணிகளைக் கௌரவித்து அன்னை சிவத்தமிழ் விருது வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# கலாவிநோதன் கலாபூஷணம் அச்சுவேலி உயர்திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)

## அவர்கள்

## ( பாரம்பரிய வில்லிசைக் கலைஞர் )

நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் மகனாக 1936.03.30இல் வடமராட்சியில் அமைந்திருக்கும் மாதனை என்னும் கலைவளம் நிறைந்த சிற்றூரில் பிறந்தார். தனது எட்டாவது வயதில் குழந்தைக் காத்தனாக நடித்துப் புகழ்பெற்ற இவர் நாடகத்துறையிலும், கல்வியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வளர்ந்து வந்தார். தமிழ் மொழியில் பெரும் புலமை கொண்டிருந்த தனது பெற்றோரிடம் புராண இதிகாச வரலாறுகளைக் கற்றதுடன் தனது மாமனாரான கீதாஞ்சலி வி.கே. நல்லையா அவர்களிடம் நடனத்தையும் இசையையும் கற்றுக்கொண்டார். பாடசாலைப் படிப்பைச் செவ்வனே முடித்த பின் 1957இல் ஆசிரிய நியமனம் பெற்று இரத்மலானை கொத்தலாவலபுரம் தமிழ்ப்பாடசாலையில் தமிழ், ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். இக்காலத்தில் தமிழகத்தின் புகழ்பூத்த நாடகமேதைகளான டி.கே.எஸ். சகோதரர்களுடன் இணைந்து நாடகங்களில் பங்குகொண்டார். அத்துடன் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பணியாற்றி வந்தார். அத்துடன் அக்காலத்தில் கொழும்பில் நாடகங்களை மேடையேற்றுபவரும் திரைப்பட நடிகரும், வில்லிசையாளருமான கலைவாணருடன் தங்கியிருந்து நாடக உத்திகளையும், வில்லிசையின் நுட்பங்களையும் கற்றுக்கொண்டார்.

இவரது குருவாக விளங்கிய திருப்பூங்குடி ஆறுமுகத்தின் ஆசீர்வாதத்துடன் தனித்துவமான வில்லிசைக் கலைஞராக 02.02.1968 அன்று மாலை தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றலில் பெருந்திரளான பொதுமக்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் கண்டார். பல்துறைத்திறன் கொண்ட இவர் வில்லிசை நிகழ்வின் நாயகனாக அமர்ந்து கதையைச் சொல்லும் முறையும், நவரச பாவங்களை முகத்தில் காட்டும் அழகும், பாத்திரமாக மாறி நடிக்கும் திறனும், தமிழை அழகுற உச்சரிக்கும் பாங்கும், பொருளுணர்ந்து சுருதிலயம் பிசகாமல் பாடும் தன்மையும் சிந்தையைத் தூண்டும் நகைச்சுவையும் இவரது தனித்துவப் பண்புகளாக வில்லிசை நிகழ்வுகளில் பொங்கிப் பிரவகித்த போது மக்கள் தம்மை மறந்து இரசித்தனர். மரபு வழியான கலை நிகழ்வுகளே முழுமையாக ஆலயத் திருவிழாக்களில் இடம்பெற்று வந்த அக்காலத்தில் இவரால் தொடக்கப்பட்ட வில்லிசையானது பெரும் வரவேற்பைப் பெற்றது.

இக்கலைக்கெனத் தன்னை அர்ப்பணித்த இவர் தமிழர்களால் விரும்பப்படும் கதைகள் அனைத்தையும் வில்லிசை வடிவில் உருவாக்கி சிறப்புற நிகழ்த்தி வந்தார். இவர் ஈழத்தின் பகுதிகளில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ் போன்ற நாடுகளிலும் தனது வில்லிசை நிகழ்வுகளை நிகழ்த்தியுள்ளார். கம்பன் கழகத்தால் முதறிஞர், வடமாகாண ஆளுநர் விருது, இந்து கலாசார அமைச்சின் கலாபூசண விருது என்பன உட்பட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு பட்டங்களும் விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். வில்லிசைக்கு முன்னோடியாகி புகழ்பூத்த வில்லிசைக் கலைஞரான சின்னமணி அவர்களை இவ்வாண்டு சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.



## ஏழாலையூர் சைவத்திரு
## சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள்

**( முன்னாள் விவேகானந்தசபை பரீட்சைச் செயலாளர், ஓய்வுநிலை கணக்காய்வுத் தணிக்கையாளர் )**

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சி.கந்தசாமி அவர்கள் 1936.03.15இல் பிறந்தார். கணக்காய்வுத் திணைக்களத்தால் தணிக்கை அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அரச சேவையின் போது கொழும்பில் கடமையாற்றிய வேளையில் 1959இல் கொழும்பு விவேகானந்தசபையில் இணைந்து அகில இலங்கை ரீதியில் இச்சபையால் நடாத்தப் பெற்ற சைவசமயப் பாடப்பரீட்சை செயலாளராகப் பல வருடங்கள் கடமையாற்றினார். 1958இல் திருக்கேதீச்சரம் தர்மகர்த்தா சபையில் இணைந்து ஆலயத் திருப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1959இல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டில் முக்கிய பங்காற்றிய இந்து இளைஞர் சங்கத்தை நெறிப்படுத்தி மகாநாட்டின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தார்.

மேலும் அம் மகாநாட்டின்போது “இந்து இளைஞன்” சஞ்சிகையையும் வெளியிட்டார். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைச் செயலாளராகவும் பணியாற்றினார். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் தனது பிறந்த இடமான ஏழாலையில் வசித்து வருகின்ற வேளையில் அயற்கோவில்களின் விழாக்களின்போது பங்கு கொண்டு தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார். திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தமது தந்தையின் நினைவாக திருமுறைத்திரட்டு நூலை வெளியிட்டுள்ளார். இவ்வாறாக சமயப் பணியாற்றிய சைவத்திரு கந்தசாமி அவர்களைக் கௌரவித்து அன்னை சிவத்தமிழ் விருதினை இவ்வாண்டு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**காரைநகர் மணிவாசகர் சபையின் திருவாசக விழா**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்துச் சிதம்பரம் திருக்கோவிலை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மணிவாசகர் சபையின் திருவாசக விழா இவ்வாண்டும் 25-12-2012, 26-12-2012, 27-12-2012 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்துள்ளனர். தமிழகத்திலிருந்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு புலவர் மாமணி ச.அருண சடேசன் M.A., M.Phil (பனசை S.S. அருணா) கலந்துகொள்ள ஏற்பாடு செய்துள்ளனர். முதல்நாள் நல்லை ஆதீன குருமுதல்வர் அவர்களின் தலைமையிலும் இரண்டாம் நாள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையிலும், நிறைவுநாள் மணி வாசகர் சபைத் தலைவர் பண்டிதர் திரு.மு.சு. வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையிலும் விழா நடைபெறவுள்ளது. பல சிறப்புச் சொற்பொழிவாளர்கள் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

**கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்து நிறுவனங்கள் உதவி**

கிழக்கு மாகாணத்தில் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட வேண்டுதலுக்கு பல சமய நிறுவனங்கள் உதவின. கௌரவ பாராளு மன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் மக்களுக்கு இந்து நிறுவனங்கள் ஊடாகப் பகிர்ந்து வழங்கினார். கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் மக்களால் வழங்கப்பட்ட பொருட் களைச் சேகரித்து அனுப்பி வைத்துள்ளது.

**இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் மகா கும்பாபிஷேகம்**

சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி காலத்துத் திருக்கோவில் எனப் போற்றப் படும் இப்புண்ணிய தலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தை 14ம் நாள் (27-01-2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கும் 9-15 மணிக்குமிடையிலுள்ள சுபவேளை யில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பிரதம குருவாக சிவஸ்ரீ இராம. பால சந்திரக் குருக்கள் ஆற்றுப்படுத்தவுள்ளார்.

**பேரூர் ஆதீனம் இலங்கையில் கிளை நிறுவ ஏற்பாடு**

இந்தியாவிலுள்ள பேரூர் ஆதீனத்தின் கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவி சமய சமூகப் பணிகளை ஆற்றவுள்ளதாக அறிவித்துள்ளனர். ஆதீன இளவரசு தவத்திரு மருதாச அடிகளார் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

**அராலி சிந்தாமணிப் பிள்ளையார் மகா கும்பாபிஷேகம்**

புகழ்பூத்த அராலி சிந்தாமணிப் பிள்ளையார் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, 27-01-2013 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. புதிதாக இந்திய சிற்பக் கலைஞர், சிற்ப கலாவித்தகர் புருஷோத்த மன் குழுவினரால் உருவாக்கப்பட்ட அழகிய இராஜகோபுரத்துக்கான கும்பாபிஷேகமும்

இந்நாளில் நடைபெறவிருப்பது குறிப்பிடத் தக்கது.

**கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவரின் பவளவிழா**

கனடாத் திருநாட்டில் சைவத்தமிழ்ப் பணியாற்றிவரும் சைவப் பெரியார் உயர்திரு. தி. விசுவலிங்கம் அவர்களின் அகவை 75 பூர்த்தி குறித்து சிறப்பு விழா நடாத்த கனடா ஸ்காபரோ சைவசித்தாந்த மன்றம் ஏற்பாடு செய்துவருகிறது. மிகச் சிறந்த சைவசமயக் கட்டுரைகளைத் தொகுத்து பவளவிழா மலர் வெளியிட வுள்ளனர். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.தி. விசுவலிங்கம் அவர்கள் விஞ்ஞானமாணிப் பட்டதாரி. இலங்கை யிலும் பிற நாடுகளிலும் உயர் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரது பாரியாரும் விஞ்ஞானப் பட்டதாரி. பலநூறு சைவச் சிறுவர்களை சமய வாழ்வு வாழ்விப்பதற்கு சைவசித்தாந்த மன்றத்தை ஆரம்பித்து பல வருடங்களாக வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**அளவெட்டி நாகவரதநாராயணர் கோவிலில் திருட்டு**

அளவெட்டியில் மிகவும் பிரசித்தமான இத்திருக்கோவிலில் மிகப் பெறுமதியான தங்க ஆபரணங்கள், வெள்ளி அங்கிகள் திருட்டுப் போயுள்ளது. அருட்கவி சி. விநாசித்தம்பி ஐயா அவர்களின் இத்திருக் கோவில் களவு தொடர்பாக ஆலய பரி பாலகர்களும் அடியவர்களும் அதிர்ச்சி யடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கன்னியா வெந்நீர் ஊற்று**

சைவமக்களின் பாரம்பரிய வர லாற்றிடம் பௌத்தமத நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதாக இந்து மாமன்றத் திடம் திருக்கோணமலை மக்கள் முறை யிட்டுள்ளனர். குறிப்பாக கன்னியா வெந் நீர் ஊற்றுக்கு அருகிலுள்ள பிள்ளையார் கோவில் அழிந்த நிலையிலுள்ளது. அதன் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் மாட்டுப்பண்ணை**

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் குருகுலச் சிறுவர் இல்லத்தின் வளாகத்தில் கொழும்பு மனிதநேயத்தின் பேருதவியில் மாட்டுப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 30 கறவைப் பசுக்கள் நவீன முறையில் கட்டடம் அமைக்கப்பட்டு பரா மரிக்கப்பட்டு வருகிறது. எருவைப் பயன் படுத்தி இயற்கை எரிவாயு உருவாக்கப் பட்டுப் பயன்பெற்று வருகிறார்கள்.

**நாவலர் பெருமானை நினைந்து கிழக்கிலங்கையில் பெருவிழாக்கள்**

நல்லை நகர் நாவலர் பெருமானின் சைவத்தமிழ்த் தொண்டினைப் போற்றி மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி இராச மாணிக்கம் மண்டபத்தில் 08.12.2012 அன்று பெருவிழா நடைபெற்றது. மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை இந்து மாமன்றம் இணைந்து நடாத்திய இப் பெருவிழா பட்டிருப்பு தேசிய பாடசாலை முன்றலில் இருந்து நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலமாகப் புறப்பட்டு நகர் வழியாக மண்டபத்தை அடைந்தது. மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி கஜாநந்தாஜி, நல்லை ஆதீன முதல்வர், கலாநிதி ஆறு. திருமுகன், பேராசிரியர் சு. பத்மநாதன் உட்படப் பல பெரியார்கள் ஊர்வலத்தில்

பங்கு கொண்டனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் கருத்துரைகளும் இடம்பெற்றன.

09.12.2012 அக்கறைப்பற்று விபுலானந்தர் இல்லத்திலிருந்து ஆலையடி வேம்பு கலாசார மண்டபம் வரை நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலம் இடம்பெற்று ஆலையடி வேம்பு இந்து மாமன்றச் செயலாளர் திரு. சரவணபவன் தலைமையில் பெருவிழா நடைபெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் நடைபெற்ற விழாவில் நல்லை ஆதீன குருமுதல்வர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோகேஸ்வரன், பேராசிரியர் சு. பத்மநாதன், கலாநிதி. ஆறு. திருமுருகன், கலாநிதி மு. கதிர்காமநாதன், விடைக்கொடிச் செல்வர் திரு.சி. தனபாலா உட்படப் பலரும் கருத்துரை வழங்கினர்.

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் மணிவாசகர் சபையின் 58வது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இங்கு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்தியா – தமிழகத்தில் இருந்து வருகை தந்த புலவர் மாமணி ச. அருண் நடேசன், கலாநிதி ஆறு. திருமுருகன், செஞ்சொற் செம்மல் ச. விநாயகமூர்த்தி, செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன், சிவத்திரு. கு. பாலஷண்முகன், சிவநெறிச் செல்வர் ஆ. செந்தில்நாதன், வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோரின் சிறப்புரையும், செல்வி வைஷ்ணவி குமாரசேகரம் அவர்களின் "சிவநடனம்" நடன நிகழ்ச்சியும் நடை பெற்றது.


# சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

## தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

துர்க்காதேவி துணை



# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்களின்

# 88வது பிறந்தநாள் அறக்கொடை விழா

**காலம் : 07.01.2013 திங்கட்கிழமை காலை 8.30 மணி**

**பேரன்புடையீர்,**

வணக்கம், எதிர்வரும் 07.01.2013 திங்கட்கிழமை அன்று எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையின் 88வது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்காதேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் அன்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

*வணக்கம்.*

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

**திரு. அ. சண்முகநாதன்**
*பொருளாளர்*

**திரு. சு. ஏழூர்நாயகம்**
*உப–பொருளாளர்*

**திரு. நா. தவநாதன்**
**திரு.மு. அருளையா**
*(இணைச் செயலாளர்கள்)*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*11.12.2012*

**தலைமை :** **செஞ்சொற்செல்வர் கலாநிதி**

**ஆறு. திருமுருகன் அவர்கள்**

(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

**பிரதம விருந்தினர் : மதிப்பார்ந்த**

**கௌரவ J. விஸ்வநாதன் அவர்கள்**

(யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர்)

**கௌரவ விருந்தினர் : ஆன்மீகச் சுடர் ரிஷி**

**தொண்டுநாதன் சுவாமிகள்** (அமெரிக்கா)

**சிறப்பு விருந்தினர்கள் :**

**வைத்தியகலாநிதி சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா அவர்கள்**

(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

**வைத்தியகலாநிதி முத்துக்குமாரசாமிசர்மா உமாசங்கர் அவர்கள்**

(வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

**திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள்**

(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

## நிகழ்ச்சி விபரம்

காலை 08.30மணி : **விசேட பூசை**

காலை 08.40மணி : **சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலய வழிபாடு**

காலை 08.50மணி : **திரு உருவச்சிலை பிரார்த்தனை**

காலை 09.00 மணி : **அறக்கொடை விழா ஆரம்பம்**

திருமுறை பாராயணம்

வரவேற்புரை : **திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்**

(உப பொருளாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

ஆசியுரை : **சிவஸ்ரீ.வா. அகிலேஸ்வரக் குருக்கள்**

( பிரதம குருக்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

( முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் )

**ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்**

( அமெரிக்கா )

தலைமையுரை

பிரதம விருந்தினர் உரை

சிறப்பு விருந்தினர் உரை

## அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

**யாழ் போதனா வைத்தியசாலை சிவாலயத் திருப்பணி**

**பெறுபவர் : வைத்தியகலாநிதி சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா அவர்கள்**

(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை**

**பெண்கள் சிகிச்சைப் பிரிவு**

**பெறுபவர் : வைத்தியகலாநிதி முத்துக்குமாரசாமிசர்மா உமாசங்கர் அவர்கள்**

(வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

## சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம்

(வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் வறுமை நிலையின் உச்சத்திலுமுள்ள மாணவர்களுக்கான கல்வி நிதியம் வழங்குதல்)

**பெறுபவர் : திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள்**

(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

நூலகம்
ணம்.

# சிவத்தமிழ்ச் செல்வி விருது வழங்குதல்

1. சிரேஷ்ட வைத்தியகலாநிதி நல்லூர்
**திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி அவர்கள்**

2. கலாவினோதன் கலாபூஷணம் – அச்சுவேலி
**உயர்திரு கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்கள்**
(பாரம்பரிய வில்லிசைக் கலைஞர்)

3. **உயர்திரு. சி. கந்தசாமி அவர்கள்** (ஏழாலை)
(முன்னாள் பரீட்சை செயலாளர், விவேகானந்த சபை, கொழும்பு) (இளைப்பாறிய அலுவலர், கணக்காய்வுத் திணைக்களம்)

4. **உயர்திரு. செல்வநாயகம் அவர்கள்** தெல்லிப்பழை. (முன்னாள் உபதலைவர் – ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், இளைப்பாறிய உதவி முகாமையாளர் – மக்கள் வங்கி)

5. புலவர் சமயப் பெரியார் குப்பிளான்
**மாதாஜி சிவமயச் செல்வி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

நன்றியுரை : **திரு.நா. தவநாதன் அவர்கள்**
(இணைச் செயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

அன்பர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்னையின் வைபவத்தில் கலந்து கொண்டு நிறைவில் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நிர்வாக சபை**
*சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதிய சபை,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை, இலங்கை.*

## அறநிதிய வங்கி விபரம்

**சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியம்**

**தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம். – சே.க/இல. : 1-0006-02-7248-5**
**தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம். – சே.க/கு இல. : 10072-02-0916-3**

# சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் 88ஆவது பிறந்தநாள் கல்வி அறக்கொடை வழங்கல் 07.01.2013 திங்கட்கிழமை

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள்

| | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 1. | செல்வி. கம்சிகா மலர்சிங்கம் | யா/ வட்டு. திருநாவுக்கரசு ம.வி. |
| 2. | செல்வி. புவர்னாதேவி பேரின்பநாதன் | யா/ வட்டு திருநாவுக்கரசு ம.வி. |
| 3. | செல்வன் ந. கஜன் | யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. |
| 4. | செல்வன் த. தனுஜான் | யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி |
| 5. | செல்வி. த. நளாயினி | யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி |
| 6. | செல்வன் இ. சுயேந்தன் | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தி. |
| 7. | செல்வன் மோ. நிஷாந்தன் | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தி. |
| 8. | செல்வி ம. துசியந்தி | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தி. |
| 9. | செல்வன் சு. துசியந்தன் | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 10. | செல்வன். நா. அனுஜன் | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 11. | செல்வன். த. ரிந்துஜன் | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 12. | செல்வி. சு. மேனகா | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 13. | செல்வி. து. துசானி | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 14. | செல்வி. ர. கீர்த்தனா | யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி. |
| 15. | செல்வி. ச. சுபாசினி | யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி. |
| 16. | செல்வி வ. ரேணுகா | யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி. |
| 17. | செல்வன். நி. குயின்ரன் | யா/ மூளாய் சைவப்பிரகாச ம.வி. |
| 18. | செல்வன். கு. சசிஸ்கரன் | யா/ மூளாய் சைவப்பிரகாச ம.வி. |

| | | |
|---|---|---|
| 19. | செல்வி. கி. நிரோஜா | யா/ மூளாய் சைவப்பிரகாச ம.வி. |
| 20. | செல்வி. சி. டிலக்சனா | யா/ மூளாய் சைவப்பிரகாச ம.வி. |
| 21. | செல்வன். தே. ஜீவரூபன் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 22. | செல்வன். தே. நிதர்சன் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 23. | செல்வன் அ. தக்சன் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 24. | செல்வன். கு. நிரோஜன் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 25. | செல்வன். ஜெ. தர்ஜனன் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 26. | செல்வி. ஆ. தர்சிகா | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 27. | செல்வன். க. மஜித் | யா/ வட்டு. இந்துக் கல்லூரி |
| 28. | செல்வி. சி. கொன்சலா | யா/ அராலி இந்துக் கல்லூரி |
| 29. | செல்வி. சி. பானுசா | யா/ அராலி இந்துக் கல்லூரி |
| 30. | செல்வி. பு. பிரியங்கா | யா/ அராலி இந்துக் கல்லூரி |
| 31. | செல்வி சு. மீரா | யா/ அராலி சரஸ்வதி ம.வி. |
| 32. | செல்வி. ஜெ. கீர்த்தனா | யா/ அராலி சரஸ்வதி ம.வி. |
| 33. | செல்வி. த. ராசிகா | யா/ அராலி சரஸ்வதி ம.வி. |
| 34. | செல்வன். வ. கஜேந்திரன் | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 35. | செல்வன். தே. பிரதீபன் | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 36. | செல்வன். சி. விநோத் | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 37. | செல்வன் க. சதீஸ்குமார் | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 38. | செல்வி. சு. சிவரஞ்சினி | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 39. | செல்வி.க. இலக்சனி | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 40. | செல்வி. க. மயூரி | யா/ வட்டு. மத்திய கல்லூரி |
| 41. | செல்வன். த. மோகனரூபன் | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 42. | செல்வன். சௌ. கஜவன் | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 43. | செல்வன்.ப.பிரியங்கன் | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 44. | செல்வன். தே. சிந்துஜன் | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 45. | செல்வி.க. பிருந்தா | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |

| | | |
|---|---|---|
| 46. | செல்வி. ஸ்ரீ. மதுஷா | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 47. | செல்வி. நா. தவச்செல்வி | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 48. | செல்வி. நி. கஜனி | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 49. | செல்வி. ம. மயூரிகா | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 50. | செல்வி.வ.வனிதா | யா/ சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி |
| 51. | செல்வி. ஆ. கிரிசா | யா/ மகாஜனக் கல்லூரி |
| 52. | செல்வி. ம. பியூட்டிகா | யா/ மகாஜனக் கல்லூரி |
| 53. | செல்வி. ப. ஐஸ்வர்யா | யா/ மகாஜனக் கல்லூரி |
| 54. | செல்வி.ஜெ. அனித்தா | யா/ மகாஜனக் கல்லூரி |
| 55. | செல்வி.சு. சஷானா | யா/ மகாஜனக் கல்லூரி |
| 56. | செல்வன் த. தர்மிலன் | யா/ நடேஸ்வராக் கல்லூரி |
| 57. | செல்வி. ர. அஜந்தா | யா/ நடேஸ்வராக் கல்லூரி |
| 58. | செல்வன்.ம. தனுஷன் | யா/ யூனியன் கல்லூரி |
| 59. | செல்வன். ச. அனுசானந் | யா/ யூனியன் கல்லூரி |
| 60. | செல்வன். நா. கனிசன் | யா/ யூனியன் கல்லூரி |
| 61. | செல்வி. சௌ. பிரசாளினி | யா/ யூனியன் கல்லூரி |
| 62. | செல்வி. ந. ஆதிரை | யா/ யூனியன் கல்லூரி |
| 63. | செல்வி. பி. கஜவதனன் | யா/ அருணோதயா கல்லூரி |
| 64. | செல்வன். யோ.ரிசிந்தன் | யா/ அருணோதயா கல்லூரி |
| 65. | செல்வி. வி. திவ்வியா | யா/ அருணோதயா கல்லூரி |
| 66. | செல்வி. செ. மிதுசா | யா/ அருணோதயா கல்லூரி |
| 67. | செல்வி. யோ. டினோசா | யா/ அருணோதயா கல்லூரி |
| 68. | செல்வன். பா. துசாந்தன் | யா/ மல்லாகம் மகா வித்தி. |
| 69. | செல்வி. ஆ. அபர்னா | யா/ மல்லாகம் மகா வித்தி. |
| 70. | செல்வி.ச. சாந்தினி | யா/ மல்லாகம் மகா வித்தி. |
| 71. | செல்வி. யோ. கம்சா | யா/ மல்லாகம் மகா வித்தி. |
| 72. | செல்வி. பூ. சுகன்யா | யா/ மல்லாகம் மகா வித்தி. |

| | | |
|---|---|---|
| 73. | செல்வன். பா. தர்சிகன் | யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 74. | செல்வன். து. டஜிந்தன் | யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 75. | செல்வி. அ. மதுஷா | யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 76. | செல்வி. சி. அருள்பிரியா | யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 77. | செல்வி. இ. சுதர்சினி | யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 78. | செல்வன். த. ஜினோஸ் | யா/ வீமன்காமம் ம.வி. |
| 79. | செல்வி. செ. நிருஜா | யா/ வீமன்காமம் ம.வி. |
| 80. | செல்வன் இ. குனிஸ்டன் | யா/ காங்கேசன்துறை மகா வித்தியாலயம் |
| 81. | செல்வி. அ. சுகன்யா | யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் |
| 82. | செல்வி. நா. தனுயா | யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் |
| 83. | செல்வி. சி. ஜென்சிகா | யா/ கீரிமலை நகுலேஸ்வரா ம.வி. |
| 84. | செல்வி சி. நிருஜா | யா/ கீரிமலை நகுலேஸ்வரா ம.வி. |
| 85. | செல்வி.க. காருண்யா | யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தி. |
| 86. | செல்வன். ர.பிதுர்சன் | யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தி. |
| 87. | செல்வன். ஐ.இமலோஜன் | யா/ அளவெட்டி அருணாசலம் வித்தி. |
| 88. | செல்வன் க.புஸ்பராசா | யா/ அளவெட்டி அருணாசலம் வித்தி. |
| 89. | செல்வன். ஜ. நிரோஜன் | யா/ குளமங்கால் றோ.க.த. பாடசாலை |
| 90. | செல்வி. சி. சரண்யா | யா/ குளமங்கால் றோ.க.த. பாடசாலை |
| 91. | செல்வன். யூ.ஜான்சன் | யா/ மயிலிட்டி றோ.க. |
| 92. | செல்வன் மு. டனுஷன் | யா/ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி. |
| 93. | செல்வி. சி. நிர்மலாதேவி | யா/ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி. |
| 94. | செல்வன். ஸ்ரீ. கும்சன் | யா/ வசாவிளான் மத்திய மகா வித்தி. |
| 95. | செல்வன். செ. விஷ்ணுயன் | யா/ வசாவிளான் மத்திய மகா வித்தி. |
| 96. | செல்வி. ஜெ. நிரோஜா | யா/ வசாவிளான் மத்திய மகா வித்தி. |
| 97. | செல்வி. ம. துர்ஷிகா | யா/ வசாவிளான் மத்திய மகா வித்தி. |
| 98. | செல்வி. ஜெ. நிரோஷா | யா/ வசாவிளான் மத்திய மகா வித்தி. |
| 99. | செல்வன். ஜெ. ஜென்சன் | யா/ குட்டியபுலம் அ.த.க. பாடசாலை |

| | | |
|---|---|---|
| 100. | செல்வி. பா. கலைச்செல்வி | யா/ குட்டியபுலம் அ.த.க. பாடசாலை |
| 101. | செல்வன். சீ. அஜந்தன் | யா/ சில்லாலை றோ.க.த. பாடசாலை |
| 102. | செல்வன். ச. அனோஜன் | யா/ சில்லாலை றோ.க.த. பாடசாலை |
| 103. | செல்வன். ப. துவர்கன் | யா/ சில்லாலை றோ.க.த. பாடசாலை |
| 104. | செல்வி. அ. டிலக்சனா | யா/ சில்லாலை றோ.க.த. பாடசாலை |
| 105. | செல்வி. ம. நிலோஜினி | யா/ சில்லாலை றோ.க.த. பாடசாலை |
| 106. | செல்வி.ம. தேனுஜா | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 107. | செல்வி.இ. தேனுஜா | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 108. | செல்வி. மோ. ஜனனி | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 109. | செல்வி. து. தக்சா | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 110. | செல்வி. ர. எழினா | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 111. | செல்வி. ச. ரோகினி | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 112. | செல்வன். இ. டனுஜன் | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 113. | செல்வன். கே. பேராளன் | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 114. | செல்வன். பா. கோகுலன் | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 115. | செல்வன். சி. திவாகர் | யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தி. |
| 116. | செல்வன். வி. ஜீவப்பிரியந்தன் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 117. | செல்வன். த. நிரோஜ்குமார் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 118. | செல்வன். ப. சுபராஜ் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 119. | செல்வி. ஜெ. கிருஷாந்தி | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 120. | செல்வி.ச. டிசக்சனா | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 121. | செல்வன்.இ. சுகிதரன் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 122. | செல்வன். ர. தினக்ஸ் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 123. | செல்வி. கோ. வேனுகா | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 124. | செல்வன். ஜெ. பிரித் ஜெகானந் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 125. | செல்வன். யோ. றொகிப்பிரசாந் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |
| 126. | செல்வன். ஏ. அருள்நாயகன் | யா/ மாதகல் சென். யோசெப் ம.வி. |

| | | |
|---|---|---|
| 127. | செல்வன். என். அருண் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 128. | செல்வன். யே.பியற் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 129. | செல்வன். ஜி. கோவர்த்தனன் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 130. | செல்வன். எஸ். செல்வன் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 131. | செல்வன். வி. சக்திதாசன் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 132. | செல்வன். கே. திலக் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 133. | செல்வன். கே. செந்தூரான் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 134. | செல்வன். ஏ.திவாகர் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 135. | செல்வன். ஈ. ரோஷங்டன் | யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 136. | செல்வி. பி. கார்த்திகா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 137. | செல்வி. பி. ஜீன் சௌமியா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 138. | செல்வி.பி. மிதுனா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 139. | செல்வி. எஸ். றோசாரியா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 140. | செல்வி. எஸ். பிரியங்கா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 141. | செல்வி. ஆர். சுதர்சினி | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 142. | செல்வி. ஏ.சியானி | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 143. | செல்வி. என். யங்தீனா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 144. | செல்வி.பி. கமிலா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 145. | செல்வி. எஸ். நீரஜா | யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வித்தி. |
| 146. | செல்வன். ஆர்.டிலக்ஷன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 147. | செல்வன். எஸ். சஜித் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 148. | செல்வன். என். சுஜீவன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 149. | செல்வன். எஸ். கோபிநாதன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 150. | செல்வன். ஆர்.ஆன் றொசாந்தன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 151. | செல்வன். வி. தனுசியன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 152. | செல்வன். கே. கசியன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 153. | செல்வன். எஸ். கபிலன் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |

| | | |
|---|---|---|
| 154. | செல்வன். கி. சாரங்கன் | யா/ தாவடி இந்துக் கல்லூரி |
| 155. | செல்வி. சு. வினோதினி | யா/ தாவடி இந்துக் கல்லூரி |
| 156. | செல்வி. சி. பிரியங்கா | யா/ ஏழாலை மகா. வித்தி. |
| 157. | செல்வி. த. ஸ்ரீஜெனனி | யா/ ஏழாலை மகா. வித்தி. |
| 158. | செல்வி. ம. ஜென்சிகா | யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தி. |
| 159. | செல்வி. த. யசோதா | யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தி. |
| 160. | செல்வி. ஜே. மேரி. ஜென்சிகா | யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தி. |
| 161. | செல்வி. வ. மாரமணன் | யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. |
| 162. | செல்வி. இ. கோபிகா | யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. |
| 163. | செல்வி. க.பிரகாசினி | யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. |
| 164. | செல்வி.வி. கஜன்சிகா | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. |
| 165. | செல்வி. சி. யதர்சிகா | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. |
| 166. | செல்வி. க.மஜிதா | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. |
| 167. | செல்வன். த. தனிகன் | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. |
| 168. | செல்வி. சி. சங்கநிதி | யா/ ஏழாலை சைவ மகாஜனா வித்தி. |
| 169. | செல்வன். பா. சஞ்சீவன் | யா/ ஏழாலை சைவ மகாஜனா வித்தி. |
| 170. | செல்வி. அ. பிரவீனா | யா/ உடுவில் மான்ஸ் ம.வி. |
| 171. | செல்வி.ஜெ. ஜெருப்பிரியா | யா/ உடுவில் மான்ஸ் ம.வி. |
| 172. | செல்வி. அ. அனுலதா | யா/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் |
| 173. | செல்வி. கி. நர்மதா | யா/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் |
| 174. | செல்வன். செ. சயந்தன் | யா/ குப்பிழான் விக்னேஸ்வரா ம.வி. |
| 175. | செல்வி. பா. சொர்ணா | யா/ குப்பிழான் விக்னேஸ்வரா ம.வி. |
| 176. | செல்வன். தே. கோபிகிருஷ்ணா | யா/ மயிலணி சைவ மகா வித்தி. |
| 177. | செல்வி. ந. கோபினியா | யா/ மயிலணி சைவ மகா வித்தி. |
| 178. | செல்வன். ம. மதுஸன் | யா/ இனுவில் இந்துக் கல்லூரி |
| 179. | செல்வி. ச. சங்கீதா | யா/ இனுவில் இந்துக் கல்லூரி |
| 180. | செல்வி. சீ. அஸ்வினி | யா/ இனுவில் இந்துக் கல்லூரி |

| | | |
|---|---|---|
| 181. | செல்வி. அ. தர்சனா | யா/ இணுவில் இந்துக் கல்லூரி |
| 182. | செல்வன். ஆ. கோகுலன் | யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| 183. | செல்வன். சி. சஜீவன் | யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| 184. | செல்வன். அ. யூட் | யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| 185. | செல்வி. வா. சுபா | யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| 186. | செல்வி. க. நீலாம்பரி | யா/ இராமநாதன் கல்லூரி |
| 187. | செல்வி. ர. மயூரிக்கா | யா/ இராமநாதன் கல்லூரி |
| 188. | செல்வி. ர. மயூரிந்திகா | யா/ இராமநாதன் கல்லூரி |
| 189. | செல்வி. தி. தியாகினி | யா/ இராமநாதன் கல்லூரி |
| 190. | செல்வி.க. தனுஷா | யா/ இராமநாதன் கல்லூரி |
| 191. | செல்வி.எ.டிலக்ஷனா | யா/ இராமநாதன் கல்லூரி |
| 192. | செல்வி.ம. ரூபதாரணி | யா/ இராமநாதன் கல்லூரி |
| 193. | செல்வன்.க.சுஜீவன் | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 194. | செல்வன். த. சஜீவன் | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 195. | செல்வன். ஆ. நிரோஜன் | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 196. | செல்வி. நா. கீர்த்திகா | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 197. | செல்வி. ஜீ. கயின்சிகா | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 198. | செல்வி. சு. யர்மிளா | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 199. | செல்வி. பா. கஜந்தினி | யா/ இணுவில் மத்திய கல்லூரி |
| 200. | செல்வி. நி. டயானி | யா/ இணுவில் மத்திய கல்லூரி |



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 88வது பிறந்தநாள்
அறக்கொடை விழாவின்போது வைத்திய உதவி, சிவத்தமிழ் விருது, கல்விநிதி வழங்கல் நிகழ்வுகள்





ANDRA DIGITAL PRINTERS T.P.: 021 222 8929